REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 19 | சுன்னுகம், சர்வதாரி மாசி ௩௦ (காந்தி ஆண்டு 80) 13-3-'49, ஞாயிறு | இதழ் 32

வெளிவந்துவிட்டது 2-ம் பதிப்பு

**மொழிப் பயிற்சி**

[3-ம் புத்தகம்]

முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி

4-ம், 5-ம் வகுப்புகளுக்கேற்ற இலக்கணப் பகுதிகள் முழுவதும் இந்நூல்மூலம் கற்பிக்கப்பட வசதியுண்டு. பெயராயும் வினையாயும் வருஞ் சொற்கள், ஒருபொருட் பலசொல், சொற் புணர்ச்சி, எழுவாய், பயனிலை, வேற்றுமை, செய்வினை செயப்பாட்டுவினை, முதலிய வினை வகைகளும், பலவித பயிற்சிகளும் இதில் அடங்கியிருக்கின்றன.

விலை ரூபா 1-00 தபாற்செலவு வேறு

சுன்னுகம் : தனலக்குமி புத்தகசாலை

# ஆபத்து அதிகரிக்கின்றது

## ஆசிய மகாநாடு முக்கியம்

**பொதுவாகத் தென் கிழக்கு ஆசியாவுக்கு அருகிலுள்ள நாடுகளிலும், சிறப்பாகப் பர்மாவிலும் செல்வநிலை நன்கு பாதிக்கப்பட்டு வருகின்றது.**

**இதைச் சீராக்குவதற்கு வழிவகைகள் காண்பதற்காகப் புதுடில்லியிலுள்ள — இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பிரிட்டன், அவுஸ்திரேலியா, நியூ ஸீலந்து ஆதியாம் நாடுகளின் பிரதிநிதிகள் சமீபத்திற் புதுடில்லியிற் கூடினர்.**

### மொஸ்கோ ஆதிக்கம்

அதி தீவிரமாகத் தென்கிழக்கு ஆசியாவிற் பரவக்கூடுமென்ற பயமும் உண்டாகியிருக்கின்றது.

சீனத்திலே கொம்யூனிஸ்டுகள் மகத்தான வெற்றி ஈட்டி வருகின்றனர். சீனத்துத் தேசிய அரசாங்கத்தின் சில பிற்போக்கான கொள்கைகளை அமெரிக்கா ஆதரித்து வந்த காரணத்தாற் சீனம் சீரழிந்து போனதுடன், தென்கிழக்கு ஆசியாவையும் ஆபத்து அணுகிக்கொண்டது.

ஒருமித்த கொள்கையை அடிப்படையாகக் கொண்டு தென்கிழக்கு ஆசிய நாடுகள் புதிய ஆபத்தைச் சமாளிக்கத் தயாராகிக்கொள்ளவேண்டும். இம்முயற்சி தோல்வியடையுமாயின் கொம்யூனிஸ்ட் ஆதிக்கம் இந்நாடுகள் எங்கும் ஊடுருவிப் பரவக்கூடும்.

ஆசிய, ஐரோப்பிய, அவுஸ்திரேலிய, பர்மாப் பிரதிநிதிகளை **இந்தியா** அழைத்து ஆகவேண்டிய விஷயங்களைக் கலந்தாலோசிக்க முன்வந்திருப்பது பெரிதும் வரவேற்கத்தக்கதொன்று.

மலாயா, பர்மா, சீயம், இந்தோசீனம், இந்தோனேஷியா போன்ற நாடுகளில் நிலைமை மகா மோசமாகிக் கொண்டு வருகின்றது. கொம்யூனிஸ்டுகளின் அட்டூழியங்களால் இந்நாடுகளின் பொருளாதாரநிலையானது நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியும் சிதைந்துகொண்டே வருகின்றது. ஆகவே, மொஸ்கோ காட்டும் மோ(ச)சமான வழியில் நம்பிக்கையற்ற நாடுகள் ஒன்றுகூடி அரண் அமைக்க முனைந்து நிற்பது புத்தி சாதுரியமான காரியமென்றே தோன்றுகின்றது.

### சமத்துவப் போர்

இது சம்பந்தமாக இந்தியப் பிரதமர் நேருஜி இரண்டாவது ஆசிய மகாநாட்டை விரைவிற் கூட்டவிருக்கின்றார். இந்தோனேஷியாவுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை அகற்றுவதுபற்றி இம் மகாநாட்டில் ஆலோசிக்கப்படும். உலக விவகாரங்களில் இந்தியா முக்கிய பங்கு எடுத்து வல்லரசாக நிற்கின்றதென்பதற்கு நேருஜி செய்துவரும் முயற்சிகளே போதிய எடுத்துக்காட்டாகும். இதுபற்றிச் சென்னைத் **தினசரி** ஆசிரியர் குறிப்பிடுவதாவது. "நிற வெறியை ஒழித்து உலக மக்களிடையே சமத்துவத்தை நிலைநாட்டுவதென்ற இலட்சியத்தில் இந்தியா பூரணமாக வெற்றி பெறுமலிருக்கலாம்.... இந்தியா சுதந்திரம் பெற்றவுடன் ஆசிய நாடுகளில் மாத்திரமேயன்றி, உலகம் எங்குமே வெள்ளையரல்லாதாரிடையே ஏற்பட்டுவரும் எழுச்சியும், விழிப்புமே இதற்குப் போதுமான உதாரணம். மக்களின் சமத்துவத்துக்காகப் போராட இந்தியா முன்னிற்கும் வரையில், வெள்ளையரல்லாதாரின் எழுச்சி நிறவெறியை அடியோடு தொலைத்துத்தான் தீரும். இனியும் பிறநாட்டினரையும் அடிமைகளாக வைத்திருப்பதென்பதும் நடக்காது. நிரந்தர அடிமைகளாகவிட முயற்சிகள் நடந்தாலும், நேச தேச ஸ்தாபனம் இதைத் தடுப்பதற்குக் கையாலாகாதுபோனாலும், இந்தியா சும்மா இருக்காதென்பதற்கு **இந்தோனேஷியா விஷயத்**

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

# உத்தம ஆசிரியர்கள்

## கல்வியூட்டும் பூஷணங்கள்

**சிறந்த கல்வித்திட்டம்** நிலவ வேண்டின் சிறந்த ஆசிரியர்களும் இருக்கவேண்டும். எவ்வளவு பணத்தைத்தான் கல்விக்கென வாரி இறைத்தாலும், உத்தம ஆசிரியர்கள் பணியாற்றுவதற்கு இல்லையாயின் அக் கல்வித் திட்டத்தால் எவ்வித பயனுமில்லை. இவ்வாறு கொழும்புக்கு விஜயம் செய்துள்ள கல்வி நிபுணர் சேர் ஜோன் சாஜெண்ட் அங்கு நிகழ்த்திய சமது சொற்பொழிவின்போது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது: அறிவிற்சிறந்த ஆடவரும், பெண்டிருமே ஆசிரியத் தொழிலுக்கு உகந்தவர்கள். ஆசிரியத் தொழிலுக்குக் கௌரவமும் நல்ல சம்பளத் திட்டமும இருக்குமானுற்றுன் அத்தகைய சிறந்தவர்கள் ஆசிரியத் தொழிலை விரும்பி ஏற்பார்கள். உலகின் பல்வேறு பாகங்களிலுமுள்ள ஆசிரியர்களுடன் சகல ஆசிரியர்களும் தொடர்புற்றிருப்பது அவசியமாகும். பிரிட்டன் இத்துறையில் வெளிநாடுகளிற் கிளைச் சங்கங்களை ஏற்படுத்த முயன்றுவருகின்றது.

இந்தியாவின் மொழிப் பிரச்சினைபற்றிப் பேசும்போது அப் பெரியார் கூறியதாவது: இதுவரை இந்தியாவிலுள்ள பிள்ளைகள் பல்கலைக் கழகத்துக்குச்சேருங்காலம்வரை சஙகடப்பட்டனர். ஏனெனில் அவர்கள் சிந்தனை செய்யும் மொழியில் அவர்களுக்குக் கல்வியூட்டப்படவில்லை. இன்று இந்தியாவில் தாய்மொழிக்கு மிகுந்த மதிப்பு ஏற்பட்டு வருகின்றது. ஆங்கிலத்தையும் அவர்கள் கைவிட விரும்பவில்லை. இரு மொழிகளுக்கு அதிகமாகப் பயிலவது கஷ்டமான தொன்றுகும்.

# 'தமிழோசை கேட்குதம்மா'

## வானொலி ஊழல்கள்

11-3-49

**ஆங்கில நாகரிகத்தில் மூழ்கி நிற்கும் கொழும்பு மா நகரிலே, இப்பொழுது சில ஆண்டுகளாகத் தேமதுரத் தமிழோசையைப் பரப்புவதற்கு இங்குள்ள தமிழ் அன்பர்கள் முயற்சி செய்து வருகின்றனர்.**

இது மகிழ்ச்சிதரும் ஒரு விஷயமாகும். 'இலங்கை வானொலித் தமிழ்க்கலை மன்றம்' சென்ற வெள்ளிக்கிழமை (4-3-49) நடாத்திய **முத்தமிழ் விழா**வானது தமிழ் மக்களிடையே மிகுந்த உற்சாகத்தை யூட்டியிருப்பதுடன், தமிழ்க் கலைவளர்ச்சியின் அவசியத்தையும் அதுவற்புறுத்தியிருக்கின்றதெனக் கூறவேண்டியிருக்கின்றது.

தமிழர் வாழ்க்கை முழுவதும் இசைமயமாக இருக்கின்றது. பூங்குழல் ஊதியும், யாழ் மீட்டியும், இன்னிசையைப் பரப்பினூர்கள் தமிழ்ப் பெருமக்கள் என ஸ்ரீமதி மகேசுவரி மகாதேவா பேசிய போது அங்கு வீற்றிருந்த பெண்மக்கள் சூடிய மலர் மணத்துடன் சேர்ந்து, பைந்தமிழ் மணமுங் கமழ்ந்ததென்றே கூறவேண்டும்.

முத்தமிழ் விழாவானது வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலய மண்டபத்திற் சிறப்பாக நடைபெற்றது.

இனிய நாதஸ்வரக்கச்சேரியுடன் ஆரம்பித்த இக் கலைவிழா, கலாரசிகர்களின் சிறப்பை நாற்றிசையும் பரப்புவது போலவே யிருந்தது.

தபால் — தந்திப் பகுதி மந்திரி ஸ்ரீ சிற்றம்பலம் அவர்கள் விழாவை ஆரம்பித்து வைத்த போதிலும் சுகவீனங் காரணமாகப்பேசமுடியவில்லை. எனவே மன்றத் தலைவர் பண்டிதர் க. பொ. இரத்தினம் அவர்கள் அமைச்சரின் ஆரம்பவுரையை வாசித்தார்.

### யாழ் நூல் அரசர்

'இசையா விசைகொண்ட தமிழ்' என்பதுபற்றி ஞாயிற்றுக்கிழமைகாலை பேசிய இலங்கைப் பல்கலைக்கழகத்து தமிழ் விரிவுரையாளரான, ஸ்ரீமதி மகேசுவரி மகாதேவா அவர்கள், தமிழ் இசைத்துறையில் அற்புதமான ஆராய்ச்சிகளைச் செய்து அருந்தொண்டாற்றிய விபுலாநந்த அடிகளாருக்குத் தமிழகம் உலகிலுள்ள வரை கடமைப்பட்டுள்ளதென ஆர்வத்துடன்குறிப்பிட்டார். சுவாமிகளின் **யாழ்நூல்** விலைமதிக்கவொண்ணுத பொக்கிஷமென்பதையும் அவர் எடுத்துரைத்தார்.

இப் பேச்சின் போது தமிழ் அறிஞர் ஸ்ரீ க. ச. அருணந்தி தலைமை வகித்தார் பிற்பகல் உதவிக் கல்வி மந்திரி ஸ்ரீ கே. கனகரத்தினம் அவர்கள் தலைமை வகித்திருக்கவேண்டியது. அவர் அவசர அலுவலாக யாழ்ப்பாணஞ் சென்றிருந்தபடியாற் சஹிராக் கல்லூரிப் பிரதம ஆசிரியர் ஜனுப் எ. எம். ஏ. அஸீஸ் தலைமை வகித்தார். தமிழ் வளர்ச்சியுறுவதற்கு நாவலர்களும் விபுலாநந்தர்களும் பாரதிகளும் தோன்ற வேண்டுமென ஜனுப் அஸீஸ் குறிப்பிட்டிருந்தார்.

[illegible] பெற்ற விழாவின்போது ஸ்ரீ




சி. க. இராசசிங்கம் அவர்கள் தலைமை தாங்கினுர். ஒரு நாடகம்பற்றிச் சுவையான சொற்பொழிவொன்றை ஸ்ரீ அ. வி. மயில்வாகனம் நிகழ்த்தினுர்.

முத்தமிழ் விழா வெற்றிகரமாக நடைபெற்றது. 'கலையும் அதன் பயனும்' என்ற விஷயமாக வெள்ளிக்கிழமை சொற்பொழிவு நிகழ்த்திய சோ. நடராசா அவர்களின் பெருமுயற்சியும், செயலாளர் நா. ப. பாலசந்திரன் என்பவரின் ஆர்வமுமே விழாவை வெற்றிபெறச்செய்தனவெனப் பலர் பேசிக்கொண்டனர்.

### "வானொலி வண்டவாளம்"

கொழும்பு வானொலி தமிழ் நிகழ்ச்சிகள் சம்பந்தமாக நடைபெறும் ஊழல்களை வெளியாக்கிய பெருமை ஈழகேசரிக்கு உரியது. சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பு வானொலிபற்றிய குறைகளை ஈழகேசரி அம்பலப்படுத்தியபோது இங்குள்ள ஒரு சில அரசாங்க ஊழியர்கள் "ஆ, ஊ, என்ன அநியாயம்" என்று ஈழகேசரிமீது துள்ளிப் பாய்ந்தனர். ஆனுல் அன்று தொடக்கம் இன்றுவரை சகல வண்டவாளங்களும் இங்குள்ள சகலபத்திரிகைகளிலும் வெளிவரலாயின.

இங்குள்ள தமிழ்த் தினசரி ஒன்றின் ஆசிரியர் தமது 3-3-49 இதழில்நமது வானொலி பற்றிக் குறிப்பிடுவதாவது:-

"...ஒருவித குடும்ப ஆட்சி வானொலித் தமிழ்ப் பகுதியில் நிலவுகிறதென அனுமானிக்கவும் இடமுண்டு. வானொலியிற் செல்வாக்கும் அதிகாரமும் உடையார் சிலர் இருப்பதாகவும், அவர்களை அறிந்தாரும், அறிந்தாரை அறிந்தாரும், அறிந்தாரை அறிந்தாரை அறிந்தாரை அறிந்த மற்றவருமென இவ்வாறுள்ளவர்களே நிகழ்ச்சிகளிற் சந்தர்ப்பங்களைப் பெறுகின்றனர் என்று புகார் செய்யப்படுகின்றது..."

அதே தினசரிப் பத்திரிகையின் 11-3-49 இதழில் வானொலி நிலையத்தின் வண்டவாளங்கள் என்ற தலைப்பிற் 'கலம் கலமாக' எவ்வளவோ உண்மைகள் வெளியாகியுள்ளன. 'சாம்பிகளுக்காக' ஒருசிறுபகுதியை எழுதுகின்றேன். (ஆம் அத்தினசரியிலிருந்து)

".......சமீபத்தில் ராஜா சேர் அண்ணுமலைச் செட்டியாரின் ஞாபகதினம் யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றதையும் அவ் வைபவங்களிலே முத்தமிழ்க்காக முழுநேர வேலைசெய்து உயிரைவிடத் தயாராயிருக்கும் சில கனவான்கள் தலைகீழாக நின்று பாடுபட்டு உழைத்ததையும் நாம் மறந்துவிடவில்லை. கொழும்பில் நடந்த ஞாபகவிழா நிகழ்ச்சிகளில் பெரும்பகுதி ஏறக்குறைய மூன்று மணித்தியாலம் எங்கள் வானொலி நிலையமாக உலகெங்கும் ஒலிபரப்பப்பட்டதை எவர்தான் மறந்திருப்பர்.."

அரசாங்க ஊழியர்கள் ஒரு சிலர் கலைவளர்ப்பதற்கெனத் தமது கடமையையும் மறந்து கச்சைகட்டிக்கொண்டு நிற்பதால்தான், இவ்வளவு சீர்கேடுகளும் புகுந்துள்ளதென்பதை யார் மறுப்பார்கள் ?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஊ...........ர் வதந்தி



● கொண்டோடி ●

● 20-ந் திகதி ஒலிப்பதிவு செய்யப்பட்ட பாப்பாண்டவரின் பேச்சைக் கொழும்பு ரேடியோ நிலயம் ஒலி பரப்பமாட்டாதாம்.

☼ இந்தப் பேச்சு லத்தீன் பாஷையிற்ருன் பேசப்பட்டதாம்.

☼ பெரும்பாலோர் இதை விளங்கிக்கொள்ளமாட்டார்களாம்.

☼ பாப்பாண்டவர் கிரேக்க பாஷையிற் பேசியிருந்தால் இலங்கை ரேடியோ சில சமயம் ஒலிபரப்பியிருக்கக்கூடுமாம்.

● ஒலி பெருக்கி மூலமாக வினுக்களுக்கு விடைகளும் கொடுத்தார்களாம்.

☼ சில மாணவர்கள் சர்வகலாசாலைப் பரீட்சைக்குப் போயிருந்தார்களாம்.

☼ ஒலி பெருக்கிகள் மூலம் விடைகள் கூறப்பட்டனவாம்.

☼ மாணவர்களும் எழுதித் தள்ளிவிட்டார்களாம்.

☼ இது பாத்வான் என்ற ஊரில் நடைபெற்றதாம்.

☼ இலங்கைக் கல்லூரி மாணவர்கள் இதை யோசித்தழுகிருர்களாம்.

☼ ஒலிபெருக்கி மூலம் விடைகளைக் கொடுத்தால் அப்படியே 'கொப்பி'யடிப்பதில் நம்மவர் கெட்டிக்காரராம்.

● ஒலிபரப்பி நாட்டுக்கே நாசமாம்.

☼ தபால் தந்தி மந்திரி சிற்றம்பலமும் ஏதோ சொன்ருராம்.

☼ இலங்கை ஒலிபரப்பி மூலம் வியாபார விளம்பரங்களைப் பற்றித்தானும்.

☼ விளம்பர ஒலிபரப்புகளைப் புகுத்த இலங்கை ஒலி பரப்புத் தகுந்ததாயில்லை என்ருராம்.

☼ சபாஷ் சிற்றம்பலத்தின் பெரிய யோசனை எப்படியாம்.

☼ வயது போகப்போக அறிவு ஏறுவது இயல்புதானும்.

● காலம் போகப்போக என்ன செய்வதென்று யோசிக்கிருர்களாம்.

☼ 4200 ஏக்கர் சோளம் அறுவடையாகிவருகிறதாம்.

☼ அதன்பின் கடுகு பயிரிடுவார்களாம்.

☼ இலங்கையில் தேவைப்படும் கடுகைவிட இரண்டு பங்கு இவ்வருஷம் கிடைக்குமாம்.

☼ இதைத்தான் கடுகு சிறிதென்ருலும் காரம் பெரிசு என்கிருர்களாம்.

☼ இருபங்கு கடுகு கிடைத்தாலும் அதிகாரிகளுக்குத் ... ம்தாந்தரவாம்.

☼ தேவையான கடுகைவிட மிகுதிக் கடுகை என்ன செய்வதாம்.

☼ இது யோசனையையும் பரிசீலனையையும் கிளப்பியிருக்கிறதாம்.

☼ மிதமிஞ்சிச் செலவு செய்யாது விடுவதில் நமது அரசாங்கம் பெரும் புலியாம்.

● புலி புலியென்று சூளறி உயிர் விட்டவர் பலராம்.

☼ நம் நாட்டிலுள்ள பால் ஊற்று வற்றி வருகிறதாம்.

☼ இதனைக் கால்நடை வைத்தியச் சங்கம் சுகாதார மந்திரிக்குச் சொன்னதாம்.

☼ போதிய பால் இலங்கை மக்களுக்குக் கொடுக்கவேண்டுமாம்.

☼ பழைய நிலைமையில்தான் இருக்கிறதாம்.

☼ யாழ்ப்பாணத்திலும் பால் நிலைமை மோசமாகிவிட்டதாம்.

☼ பால் விற்பவர்களும் மோசத்திற்குள்ளாகிருர்களாம்.

☼ இதைப்பற்றி யாழ்ப்பாணத்திற் பெரிய புகார் கிளம்பியிருக்கிறதாம்.

☼ இன்னும் சில நாட்களில் தெரியுமாம்.

● இந்த நாட்களில் மிகவும் இனிப்பான விஷயமும் செனற் சபையிற் பேசப்பட்டதாம்.

☼ யாழ்ப்பாணத்திற் கருப்பநீர் அதிகமாகக்கிடைக்கிறதாம்.

☼ ஆகையாற் சீனி உற்பத்தியைப்பெருக்கவேண்டுமாம்.

☼ இதற்காக ஒரு சீனி ஆலை யாழ்ப்பாணத்தில் நிறுவவேண்டுமாம்.

☼ இந்த இனிப்பான பிரேரணையைத் திரு. இராஜேந்திரா கொண்டுவந்தாராம்.

● இனிப்பு ஒரு புறமிருந்தால் மற்றப் புறத்திற் காரமும் இருக்கத்தானே வேண்டுமாம்.

☼ விசுவாசத் துரோகிகளுக்கு திரு. வன்னியசிங்கம் எச்சரிக்கை செய்தாராம்.

☼ அச்சுவேலியிலேதான் செய்தாராம்.

☼ பேச்சு மிகவும் காரசாரமாயிருந்ததாம்.

● காரமான சம்பவங்கள் வேறு இடங்களிலும் நடைபெறுகின்றனவாம்.

☼ ஹோரணையிலுள்ள றப்பர் தோட்டத் தொழிலாளர்களின் நிலைமை மோசமடைந்துவிட்டதாம்.

☼ 9 தோட்டங்களிலிருந்து 2000 பேர் வேலையிலிருந்து நீக்கப்படுவாராம்.

☼ இந்திய மசோதாவிற்கும் இந்த வேலைக்கும் சம்பந்தமில்லையென்றும் சொல்கிருர்களாம்.

● கொழும்பில் 66000 பேர் வேலையில்லாமல் இருக்கிருர்களாம்.

☼ இந்தத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்காக திரு. எம். துரையப்பாவை நியமித்திருக்கிருர்களாம்.

● திட்டங்களென்பதை வெகு திட்டமாக ஆக்கி வைத்தல் வேண்டுமாம்.

☼ திட்டங்களிலும் திண்டாட்டம் ஏற்படக்கூடுமாம்.

☼ ஜப்பானியப் பெண்களைமணந்த அவுஸ்திரேலியரும் திண்டாட்டப்படுகிருர்களாம்.

☼ அவுஸ்திரேலியப் போர்வீரனுலும் சரி பொதுப் பிரஜையானுலும் சரி ஜப்பானியப் பெண்ணை மணக்கலாமாம்.

☼ ஆனல் அவுஸ்திரேலியாவிற்குக் குடும்ப சமேதராய் வர முடியாதாம்.

☼ ஜப்பானில்தான் வாழலாமாம்.


சிறந்தபலனுக்கு

C. C. C. புகையிலைப்பசளை

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனியார்

இரண்டு விதமான வெவ்வேறு கலவைகள் எங்களால் தயாரிக்கப்பட்டுக் கொடுக்கப்படுகின்றன. ஒன்று சப்புகிற புகையிலைக்கு வேண்டிய மாதிரியிற் பிரத்தியேகமாகக் கலவை செய்யப்படுகிறது. மற்றது சுருட்டுப் புகையிலை அல்லது குடி புகையிலைக்கு வேண்டிய மாதிரியில். இவ்விரு கலவைகளும் தோற்றத்தில் அதிக வித்தியாசமுடையவை. கமக்காரர்கள் தங்கள் தேவைக்கு எழுதும்போது தாங்கள் பசளையிடப்போகும் புகையிலை (மேலேகாட்டிய) எந்த வகையைச் சேர்ந்ததென விபரமாகக் கூறவேண்டும்

C. C. C.

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனி
லிமிற்றெட்

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றியவிபரங்களுக்கு உடனே எழுதவும்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

The
Colombo
Commercial
Company
LIMITED.

INCORPORATED IN
GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

(3622)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவியமும் ஓவியமும்

## இலக்கிய அரங்கர்

— வி. எஸ். குருசாமி —

**உணர்வு மிக்க மக்கள்** உள்ளங்களின் இன்பத்தினை உணர்த்தவுந்தரவல்ல சொற்பிணைப்பே செய்யுளழகு எனப்படும். அதனையே அணியென்றும் அலங்காரமென்றும் கூறுவார்கள். தட்பமும் வெப்பமும் தாக்காது உடம்பினைப் பேணுவதே ஆடையின் நோக்கமும் பயனுமாகும். அற்றாக மக்கள் தமது நாகரிக வாழ்வுக்கும் நாட்டு இயல்புக்கும் இணங்க ஆடையைப் பல்வேறு திறம்படக் கூறு செய்து அழகுபட இணைத்துப் புனைந்து கொள்வதைக் காண்கின்றோம். அல்லதூஉம் ஆவினது நறும் பால் ஒன்றினையே ஒரு சிலர் நன்கு காய்ச்சி வெல்லக் கட்டிச் சுவைக்க வுண்ணுதலையும், ஒரு சிலர் பிரையிட்டுப் புளிப்பேறச்செய்து கொழுமை சான்ற தயிர் ஆக்கி உண்ணுதலையும், வேறு சிலர் அத் தயிர்த்தொகுதியை மத்திட்டுக் கடைந்து வெண்ணெயும் தயிருமாகப் பாகஞ் செய்து உண்ணுதலையும் காணுகின்றோம். இவைகளைப்போலவே ஒவ்வொரு மெய்ப்புலவனும் தத்தம் மன இயற்கைக்கும் விழைவுக்கும் சூழலுக்கும அமையவே தம் கருத்துக்களைப் பல்வேறு வகைப்படுத்தி அழகுசெய்து வெளிப்படுத்துவன். அதனுலன்றோ அவ்வழகுகள் எல்லாம் உவமை முதலாகப் பல திறப்பட்டு விரிந்தன எனபது எங்ஙனமென்று கூறுதும்:- வினைத்திறத்திற் கைவந்தான் ஒரு மயிர்வினையன் திட்டநுட்ப ஒட்பங்கள் அமையச் செய்த செய்கையில் அத்துறையிற் பயிற்சிசாலாப் பிறன் ஒருவன் புகுந்து அச்செய்கையைத் திருத்துவானுயின் அதன் வனப்பும் பொலிவும் அழிந்துபோதல் போலவும், கவின் துறுமிய பெருமனையில் ஒரு சிறு கற்றுணும் பெயர்த்தெடுக்கப்படுமாயின் அதன் வீறு முழுமையும் சிதைந்து போதல் போலவும் ஏலாவாமெனக.

இனிக் காலமும் இடமும் பற்றிப் புலவர்தம் கருத்துக்களும் அக்கருத்துக்களை வெளிப்படுத்தும்செய்யுள் நெறிகளும், அந் நெறிகளைக்கொண் டுய்க்கும் மரபுகளும் வேறுபடும். கடைச்சங்க காலத்து நிலவித் திகழ்ந்த கபிலர், நக்கீரர், திருவள்ளுவர், சாத்தனுர் எனற மெய்ப்புலவர்கள் யாத்த பாட்டுக்களின் இயல்புகள் பிறிதொரு திறமாதலையும் இக் காலத்துப் புலவராயினுர் செய்து போதரும் செய்யுட்டன்மைகள் அவ்விரு திறங்களிலும் பார்க்கப் பெரிதும் மாறுபட்டுப் புதிய ஒரு திறமாகி நிற்றலையும் நடுநின்று நோக்குவோர் எளிதில் உணர்வர்.

**கடைச்சங்ககாலத்து மெய்ப்** புலவர்கள் இயற்கை நெறியின்வழி செல்லாது கற்போர் உள்ளங்களை அவ்வியற்கைக் காட்சிகளோடு பெரிதும் இசைவித்து நிற்கும் இனிய பாட்டுக்களைச் செய்தருளினர். இடைப்பட்ட காலத்திருந்தார் அம்மரபினைச் சிறிது கைநெகிழவிட்டுச் செயற்கைப் பொருட் கூட்டங்களோடு படிப்போர் நெஞ்சங்களைப் பிணிப்பித்து மன உணர்வின் தொழிற்பாடு மிகுதியும் வேண்டி விளங்கப்படும் கற்பனைகளையும் அணிகளையும் புதுமை புதுமையாகக் கொணர்ந்து தமது கருத்துக்களை வெளிப்படுத்தினர். இக்காலத்துப் புலவர்களில் ஒரு சிலர் அவ்விரு வழக்குகளையும் தழுவியும் பெரும்பாலார் மற்று அவற்றை அறவே யொழித்துப் புதியதொருநெறியைக் கடைப்பிடித்தும் பாட்டுக்கள் யாத்தும் வருகின்றனர். அப்புது நெறியால் விளைந்த ஆக்கமும் கேடும் பின்னர்க் கூறுதும்.

இவ்வாற்றுன் முதலிரு திறத்தாரும் வெளிப்படும் கருத்துக்கள் ஒன்றுயினும் வெளிப்படுத்துந் திறன் வேறுபடுதலினுலே கற்போருள் ஒரு

சாரார் பிந்திய நெறிவாழ்க்கையை வியந்துகொள்வர். நீரொன்று தானே முகிலாய் மழையாய்ப் பனிக்கட்டியாய் நிற்றல் போலவும் பகலவன் தோற்றம் என்னும் ஒரு பொருள் தானே புலவர்க்குப் பலவாறுயிருத்தல் போலவும் என்றுணர்க.

**இனி, மெய்ப் புலவர்கள்** செய்யும் பாட்டுக்கள் எல்லாம் ஓவியங்கள் என்றே கருதப்படும். காவியப் புலவனும் ஓவியப் புலவனும் மனைச் சிற்ப வல்லானும் ஒருவனையொருவர் ஒப்புடையர். காவியப் புலவன் தறுகண் வீரனின் வெகுட்சி நிலையைச் சில்வகைச் சொற்களால் வெளிப்படுத்துதல் சாலும். அதுபோலவே அவ்வெகுட்சிநிலையைத்தானே ஓர் ஓவியப்புலவனும் மனைச் சிற்ப வல்லானும் கிழியினுங் கல்லினுந்தீட்டியும் செதுக்கியும் வெளிப்படுத்துவர். பத்துப் பாட்டிற் சிறந்த ஓவியக் கருவூலத்தை யாம் யாண்டும் கண்டிலம். எட்டுத் தொகையிற் சிறந்த ஓவியக் களஞ்சியத்தை யாண்டும் கண்டிலம். திருக்கோவையார் இராமாயணம், நைடதம், பெரியபுராணம், கந்தப்புராணம் முதலிய கற்பனைப் பொருளின் அணித்திறம் மலிந்த ஓவிய மணிப் பேழைகளைக் காண்போம்.

இவ்வோவியங்களின் அழகுகளையெல்லாம் தமது கூர்த்த மதிவளத்தா லெடுத்துக் காட்டினுர் நச்சினுர்க்கினியர், பேராசியர் பரிமேலழகர் என்றற்றொடக்கத்து உரை வல்ல புலவராமெனக.

இனி, இங்ஙனம் மெய்ப் புலவர்கள் செய்தருளும் பாட்டுக்களை ஓவியமென்ற தென்னையோவெனிற் கூறுதும்:- ஓர் ஓவியப் புலவன் பலவகை வண்ணமும் துகிலிகையும் பிறவும் கருவிகளாகக்கொண்டு கட்புலனை வல்லதோர் ஓவியத்தை வெண்கிழியிலே தீட்டுகின்றுன். காவியப் புலவனும் சொற்கருவிகொண்டு இயங்குதிணை நிலைத் திணைப்பொருட்களின் அழகுகளை எல்லாம் ஒன்றாகத் திரட்டிச் செய்யுளாக எழுதுகின்றுன். ஓவியங்கள் கட்புலனுடையார்க்கே பயன்படுவனவாகும். செய்யுள்கள் மன உணர்வினுல் அறிந்துகொள்ளப் படுவனவாகும். கட்புலனில்லாதானும் காவியத்தைக் கண்டு சுவைகொள்ளுதல் ஒருவாற்றுனும்

சாலாது. ஆனுற் கட்புலனில்லாதானும் காவியத்தைக் கேள்வி மாத்திரையானே நயந்து சுவைத்தல் சாலும். ஓவியப் புலவன் புறக் கண்ணிற்குக் காட்சி நல்கி மகிழ்வித்தல்போலக் காவியப் புலவன் கற்போரது அகக் கண்ணிற்குக் காட்சி நல்கி நல்கி மகிழ்விக்கிறுன். அழகொழுகும் வண்ணங்களினுல் எழுதப்படுவனவெல்லாம் ஓவியம் ஆகா. அதுபோலவே அழகும் இனிமையுள்ள சொற்கூட்டத்தால் இயல்வனவும் செய்யுளாகாவெனக. குமர குருபர சுவாமிகள் மெய்யோவியத்தின் இயல்பைத் தமது பிள்ளைத் தமிழில் ஓரிடத்தில் "திருவுள்ளத்தில அழகொழுகவெழுதிப்பார்த்திருக்கும் உயிரோவியமே" என்று கூறுதலினுலே அதற்கு அழகொழுகுதல் மாத்திரம் அன்றி அவ்வழகு முழுமையும செறிந்து நிற்பது உயிர்கொலோவென்றையம் பிறத்தற் கேதுவான வகையில் அஃது இயல்வதே சிறந்த இலக்கணமாமென்பது அறியப்படும். அதுபோலவே காவியப் புலவன் யாக்கும் செய்யுள்களிற் சொல்லழகு மாத்திரமன்றி நுண்பொருள் வளமும் மெய்ப்பாடும் வாய்க்கப்பெற்றனவே யுண்மைச் செய்யுள்களாமென்று அறிவேம். இதனை யோர் எடுத்துக்காட்டினுல் விளக்குதும். அயோத்திமாநகரத்து வனப்பை எடுத்துரைக்கப்புகுந்த கம்பர்பெருமான் அதன்வாயில் மாடங்களிலே எழுதப்பட்ட ஓவியத்தின் விழுப்பத்தைப் பின்வருமாறு கூறியுள்ளார். அது:

> தாவில் பொற் றலத்தினற்
> றவத்தினேர்கள் தங்கு நாட்
> பூ வுயிர்த்த கற்ப கப்பொ
> தும்பர் புக் கொதுங் குமால்
> ஆவி யொத்த சேவல் கூவ
> அருகு வந்த ணைந் திடாது
> ஓவி யப்பு றவின் மா
> டிருக்க வூடு பேடை யே

என்பது இச்செய்யுளிலே புறவுப் பெடையொன்று தனது உயிரனைய சேவலைக் காணுது வருந்தித் தேடிப்போயிற்று. போயது நகரத்து மதில்மிசை அழகு ஒழுக எழுதப்பட்ட பெண் புறவினை யணைந்து உவகை பூத்திருந்த தனது சேவலைக்கண்டு அதனைக் கூவியழைத்தது. அழைக்க அவ்வோவியப் புறவே தனது இனிய காதற் பெடையென்று முழுவதும் நம்பி அதனை ஆர நோக்கி வாராதிருந்தது.

இருத்தல் கண்டு தன் சேவலுடன் ஊடல்கொண்டு ஐம்புலமடக்கும் செம்புலச் செல்வர் வதியும் கற்பகச் சோலையிற் புகுந்தது என்னும் பொருளை நன்கு விளக்கினுர். மதின்மிசை அழகு கனிய எழுதப்பட்ட பெண் புறவின் ஓவியத்தைக் கண்ட சேவல் அதனையே தனது இனிய காதற் பெடையென்று கருதி மயங்கியிருந்தமையையும் நெடுநாட் பயின்ற அப்பெடையின் இன்குரலைத்தானும் நம்பாதொழிந்தமையையும் நுணுக்[illegible] வோவியம் உயிரோவியமென்பது இனிது புலனுகும். நக

ரத்தின் பொருள்வளத்தையும் இன்ப நுகர்வினையும் ஓவியத்தினமேல் வைத்துக் காட்சியளவையாற் புலப்படுத்துவதையும் மற்றும் முகத்தானே அன்பின் செழுதகைமையை ஐயறிவுடைய புறவின்மேல் வைத்து விதந்ததுகூறி மற்றஃதங்ஙனமாயின் மனவுணர்வு மிக்க அந்நகரத்து மக்களது காதல் வாழ்வு நனி சிறப்புடையதாமன்றே என்று கருத்தளவையிற் புலப்படுத்துவதையும் உட்கோளாகக் கொண்ட புலவர்பெருமான் பொருளோவியச் செழுமையைத் தமது சொல்லோவியத்தால் தெள்ளிதின் புலப்படுத்தினுர். இவற்றுல் உயிரோவியமும் உயிர்ச்செய்யுளும் தம்முள் வேற்றுமையின்றி நடப்பனவாமென்பது இனிது போதரும்.

**காவியம் சொல்லோவியம்** அதைப் படிக்கும்போதே உள்ளத்தில் ஓவியக்காட்சி தானே அமைகின்றது. உருவம் இல்லாத பொருள்களையும் உணர்ச்சிகளையும் உணரும்படி செய்துவிடுகின்றது. உலகிற் காணும் பொருள்களின் குறைபாடுகளைப் போக்கி அதற்கு ஒரு அழகை ஊட்டி நித்தியத்துவத்தைத் தருவதிற் காவியமும் ஓவியமும் ஒரே நிலையில் நிற்பவை. இரண்டும் வெறும் உருவத்தை மாத்திரம் காட்டுவதோடு நில்லாமல் உணர்ச்சிகளையும் காட்டும்போது சிறப்பை யடைகின்றன. புலன்களால் நுகரும் இன்பத்தை உதவும் ஏனைய பொருள்களைக் காட்டிலும் நேரே உள்ளத்தால் நுகர்ந்து இன்புறும் கவிதை போகப் பொருள்களிலெல்லாம் தலை சிறந்தது. பொன்னின் சோதியிலும் பூவினது நறுமணத்திலும் தேனினது சுவையினும் மயங்காதார் எத்தனையோ பேரைச் செஞ்சொற் கவியின்பம் மயக்குவதைக் காணலாம். மதுகலசமும் பொன்னகையும் இனபவாழ்க்கைக் குறுதுணையாக வேண்டும். உமார் கையாமும், காணிநிலமும், பத்துப் பன்னிரண்டு தென்னைமரமும், பததினிப் பெண்ணும வேண்டுகின்ற பாரதியும் அவ்வின்பப் பொருள்களை இன்பமுடையனவாக ஆக்கக் கவிதையையும் வேண்டுகின்றுர்கள். கவிதைதான இன்ப

(தொடர்ச்சி க-ம் பக்கம் பார்க்க)

## எந்தவிதத்தில் நலம் செய்வானே?

முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி
[பல்கலைக்கழகம், கொழும்பு]

பல்லவி

எந்தை முருகனெனக் கெந்த விதத்தில்நலம்
இசையச்செய் வானே தெரியேன்.

அனுபல்லவி

செந்தில்செந் திலெனவே சிந்தை யிடையிருத்தி
வந்தனை புரிவேனை நொந்து விழச்செய்வானே—(எந்)

சரணங்கள்

1

அறிவுக் கடலினிலே அரியபே ரொளிமுத்தம்
அள்ளி யடைந்தோரெல்லாம் அணியச்செய் வதென்
சித்தம்
செறிவுக் குயர்ந்தபண்பு தெளிவுக் கிருக்கையென்றே
சிறியே னுளத்தையின்றே நெறியேவைப் பனேநன்றே
—(எந்)

2

பாட்டி லியற்கையின்பம் படர்ந்து செறிந்திடவே
பயனு மணியுஞ்சொல்லின் படிவும் நிறைந்திடவே
காட்டு முவமையெங்கும் கவின்கொண் டுறைந்திடவே
கண்டா ருளம்விரும்பிக் கொண்டாடச் செய்குவானே
—(எந்)

3

அன்பைக் குழைத்தமொழி அவிழ்த மெனவெழுந்தே
அருவி விழுவதென ஆண்மை யொடுபொழிந்தே
இன்பைத் தமிழுலகில் எடுத்தெடுத் தேமொழிந்தே
இறைபணி யும்புரிந்தே இருக்க வருளுவானே—(எந்)

4

மக்கள் மனைக்குவேண்டும் வளங்களெல்லா மளித்தே
மனத்திற் கவலையில்லா மகிழ்ச்சி நிலைவைத்தே
தக்க உடல்வளனும் தந்தே அருளை வைத்தே
தனியோர் தலையிடத்தே சாந்தத் திருத்துவானே.(எந்)

## வார்தா கல்வி மகாநாடு

### காரைநகரிலே திறப்பு விழா

**குறித்த விழாவையும் மகா**நாட்டையும் தாகூர் கலாசாலையிற் பட்டம் பெற்றவரும், சேவாக் கிராமத்திலிருந்து காந்திஜிபிடம் பலவருடங்கள் தொண்டு செய்தவரும், அகில இந்திய வார்தாக் கல்விச் சங்க உப காரியதரிசியாகக் கடமையாற்றியவரும், திருவனந்தபுரத்தில் தொழில் மந்திரியாகப் பதவி வகித்தவரும், இந்தியத் தலைவர்களுள் ஒருவருமாகிய **திரு ஜி. இராமச்சந்திரன்** அவாகள காரைநகரிலே திறந்து வைப்பார்கள். 18-3-49 வெள்ளி மாலை 5-30 மணியளவில் காரைநகர் ஆயிலி சிவஞானோதய வித்தியாசாலை மண்டபத்தில் வார்தாக் கல்விச் சாலையைத் திறந்து வைப்பார்கள். அடுத்த இருதினங்களிலும் காரைநகர்ச் சைவ மகாசபை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் மகாநாட்டில் வார்தாக் கல்வியைப்பற்றிய விரிவுரைகளும், விளக்கங்களும் நடைபெறும், அத்தருணம் இலங்கைக் கல்விப்பகுதி உத்தியோகத்தரும் சமுகந்தருவார்கள். வெளியூர் அன்பர்களுக்குத் தங்குவதற்கு ஏற்ற வசதிகளும் ஒழுங்குகளும் செய்யப்படும். மகாநாடு காரைநகர் கிராமப் புநருத்தாரண சபையின் ஆதரவில் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இது காதலல்ல

● நெல்சன், புதிய பஸ் சரீரத்தைக் கண்டுபிடித்தது, முன் ஆசனத்திற்குப் போட்டி யிடுகிறவர்களின் பெருக்கத்தை உத்தேசித்ததாயுமிருக்கலாம்.

● சாதாரண காலங்களில் வெறும் முறை கூறுகிற உறவினர்களிலும், ஆபத்துக் காலங்களில் கற்பித்தாவது முறை கூறுகிற அந்நியன் விசேஷமானவன்.

● சாதாரண காலங்களில் கோயிலுக்குச் சென்று வணங்குவதிலும், விசேஷ காலங்களில் சென்று வணங்குவதால், பல நன்மைகளைப் பெறவுங்கூடும். அதிலும் கன்னிப் பெண்கள் ஆலய தரிசனத்துக்குச்செல்வதானல்: 'நேரடி நடவடிக்கை'யில் இறங்கின மாதிரித்தான்.

## 1. செல்வச் சந்நிதி

சிலர் பிறக்கும் பொழுதே தொந்தரவுகளோடு பிறக்கிறார்கள். சிலர் தொந்தரவுகளை இடையிலே விலைக்கு வாங்கிக்கொள்ளுகிறார்கள். இரண்டாவது வகையில்தான் நான் சேர்ந்தவன். எனது நண்பன் ஸ்ரீ அம்பலவாணபிள்ளையைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. அவனுக்கு உலகத்தில் எவரோடும் உறவாக இருக்கத் தெரியாது. ஆனல் என்னோடு மாத்திரம் உறவாக இருக்கிறவித்தை அவனுக்குத் தெரியும். அவனல் எந்த இடத்திற்காவது போய் நல்ல மாதிரித் திரும்பிவரத் தெரியாது. ஆனல் வழியில் என்னை எதனிலாகிலும் மாட்டிவைத்துவிட்டுவர அவனுக்கு நன்றாகத் தெரியும்.

எனது பிரயாணத்திற்கு முன நான் பிரதானமாகக் கவனிப்பது, அம்பலவாணிக்குத் தெரியாமல் போய்வர வேண்டுமென்பதுதான். ஆனல் நான் வண்டியில் ஏறினதும் எனக்குமுன் அவன் வண்டியிலிருப்பான். 'எங்கடா போகிறாய்' என்றால், 'நீ எங்கே' என்று திருப்பிக் கேட்பான்.

'நான் கொழும்புக்கு'
'நானும் கொழும்புக்கு'
'இல்லைக் கண்டிக்கு'
நானும் கண்டிக்குத்தான்'

என்ன செய்யலாம் படவேண்டிய கஷ்டங்களைப் பட்டுத் திரும்பவேண்டியதுதான்.

தொண்டைமானறு செல்வச் சந்நிதி கோயிலில் தங்கியிருக்கும் எனது உறவினர் ஒருவரைப்பார்த்து வருவதற்காக நான் சென்ற கிழமை சென்றேன். வழக்கப்படி பஸ்ஸில் அம்பலவாணி இருந்தான். ஏதோ சந்நிதி முருகன் அருளினல், ஒரு தொந்தரவு மில்லாமற் சென்று, சந்நிதி முருகனையும்வணங்கிவிட்டு, எனது உறவினரையும்கண்டு, திரும்பி வந்து தொண்டைமானுற்றுப் பாலத்துக்கருகிலே பஸ்ஸுக்காகக் காத்துநின்றோம். எங்களுக்குச் சிறிது தூரத்தில் ஒரு இளம் பெண்ணும், ஒரு வயது சென்ற மனுஷியும் [அவள் தாய்] பஸ்ஸுக்காகக் காத்துநின்றார்கள். அவள் அம்பலவாணியை ஒரு மாதிரிப்பார்ப்பதையும், அம்பலவாணி அவளை ஏதோ உரிமையுடன் பார்ப்பதையும், அவதானித்த நான், 'யாரடா அவள்' என்று கேட்டேன், தனக்குத் தெரியாது என்று சொல்லிவிட்டான். [அம்பலவாணியிடம், இப்படியான விஷயங்களை மறைக்கும் குணம் கிடையாது.]

பஸ் வந்தது; அது நிறையச் சனங்கள்; எங்களையும் ஒரு மாதிரி மிதி பலகையில் ஏற்றிக்கொண்டார்கள். அங்கே நின்ற பெண்களை 'ஏற்ற முடியாது' என்று சொல்லிவிட்டார்கள். அம்பலவாணி மனுஷியை விட்டுவிட்டு நான் எப்படி வருகிறதென்று இறங்கிவிட்டான். எனக்குச் சிரிப்பும் தாங்கமுடியவில்லை; கோபமும் தாங்கமுடியவில்லை. ஒரே நேரத்தில் இரண்டு நேரெதிரான குணங்களால் தாக்கப்பட்டால் எப்படியிருக்கும்? பஸ்ஸோ கடைசி பஸ். நின்றால் மறுநாள்தான் வீடு; அம்பலவாணியோ, அவர்களைத் தனக்குத் தெரியாதென்று சொல்லிவிட்டு இப் பொழுது மனுஷி என்கிறான். அவள் காதில், அவளின் தாயின் காதில், நன்றாக 'மனுஷி' என்ற பதம் கேட்டிருக்கும். அவர்கள் சண்டைக்கு வரப் போகிறார்கள்.

— கசின் —

பஸ் போய்விட்டது. அம்பலவாணியை இன்றோடு கை கழுவி விடுகிற நோக்கத்துடன் பஸ்போகும் திசையை நோக்கிக்கொண்டு நின்றேன். அம்பலவாணி அவர்களுக்கு ஏதோ சொல்லிவிட்டு என்னிடம் வந்தான். அவர்கள் கோயிலை நோக்கிப் போனார்கள். என்னையும் 'இனி என்ன செய்வோம்; கோயிலுக்குப் போவோம்' என்று கேட்டான். உனக்குத் தெருவெல்லாம் மனுஷியாக நிற்கும் பொழுது கோயிலடிக்குக் கூடப் போகத் தேவையில்லையே யென்றேன்.

'இவள் தானடா மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில் மூன்றும் கிழமை இராத்திருவிழாவில், நான் தேடித்திரிந்தவள்' என்றான்.

## 2. பன்றித்தலைச்சி

பன்றித்தலைச்சி அம்மன் கோயில் இராத்திருவிழாவிற்கு 'இராஜேஸ்வரி செற்' சின்ன மேளம்வருகின்றதென்று, அம்பலவாணி என்னை வலிந்து இழுத்துக்கொண்டு போனான். திருவிழா ஊர்வலம் நடக்கும் பொழுது அம்பலவாணி என்னையும் கையிற் பிடித்து இழுத்துக்கொண்டு, பெண்கள் எல்லாரையும் நின்று நின்று குறிப்பாகப்பார்த்துக்கொண்டு சென்றான். 'இது ஏதடா வம்பு; இப்படிப் பார்க்கக் கன்னத்தில் வாங்கவேண்டிவந்தாலும வரும்'. 'என்னை மாத்திரம் விட்டுவிட்டு, நீ நன்றாகப் பார்த்துவா என்று மன்றாடினேன். அவனுடைய இரும்புப்பிடியிலிருந்து எப்படி விலகமுடியும்? ஓடியோடி எல்லா மூலையும் பார்த்துக் களைத்துப் போனான். 'யாரைப் பாக்கிறாய் என்றாவது சொல்லித் தொலையேன்' என்று கேட்டேன்.

பன்றித்தலைச்சி அம்மன் கோயில் தெற்கு வீதியில் பெரிய திருக்குளம் ஒன்று உண்டு. அதில் இறங்கி ஒருவரும் கால் கழுவக்கூடாது. வெளியில் அள்ளி வந்தே கழுவ வேண்டும். வருகிற பக்த கோடிகளுக்குக் கால் கழுவத் தண்ணீர் அள்ளிக் கொடுக்கும் திருப்பணியிற் பல வாலிபர்கள் ஈடுபட்டிருப்பார்கள். இருந்தும், பெருந்தொகையான யாத்திரிகர்கள் வருவதால் தாங்களே இறங்கி அள்ளிக்கொண்டு வந்து கழுவுவது முண்டு. அம்பலவாணியும் தண்ணீர் அள்ளிக்கொடுக்கும் திருப்பணியில் ஈடுபட்டிருந்தான்.

அம்பலவாணி சந்நிதி கோயிலில் 'மனுஷி' என்ற பெண்ணும் தாயும் கால் கழுவ வந்தினார்கள். அம்பலவாணி தண்ணீரை அள்ளி அந்தப் பெண்ணுக்குக் கொடுக்க ஓடிச் சென்றான். இடையில் வந்த ஒருவர், ஐயா, உங்கள் மனைவிக்குக் கொடுக்க முன் இந்தப் பிள்ளைக்குக் கொஞ்சம் கொடுங்கள் என்று கெஞ்சினராம். அந்த மனைவியைத்தான் தேடித் திரிகிறேன் என்று சொன்னான்.

யாரையோ? யாரோ? மனைவி என்று சொன்னல் நீ ஏன் தேடித் திரிகிறாய் என்றேன். அவள்தானடா வற்றாப்பழை அம்மன் கோயிலுக்குச் சென்று வந்து நான் சொன்ன பெண் என்று சொன்னான்.

## 3. வற்றாப்பழை அம்மன்

அம்பலவாணி என்றுமே இல்லாத அதிசயமாகத் தன்னந்தனியாக வற்றாப்பழைப் பொங்கலுக்குச் சென்றான். பஸ்ஸில் முன் ஆசனததில் இடம் பிடிப்பதற்காக யாழ்ப்பாணம் பஸ் ஸ்ராண்டுக்கு நேரத்தோடு போய்விட்டான். அம்பலவாணியையும் முந்திக்கொண்டு மூக்குக்கண்ணாடி அணிந்த இளந் தம்பதிகள் முன் ஆசனத்தைப் பிடித்துக்கொண்டார்கள். அம்பலவாணிக்குப் பின்னுக்குத்தான் இருக்க ஒரு இடம் கிடைத்தது. சனங்கள் நிரம்பிய பின், அதே பெண் [பின்னர் பன்றித்தலைச்சி அம்மன் கோயில் சந்திக்கப் போகின்ற, அதன் பின்னர் செல்வச்சந்நிதி கோயில் சந்திக்கப் போகின்ற பெண்] பஸ்ஸுக்கு வந்தாள். இந்ததடவை அவளின் தாயார் இல்லை. அதோடு அவள் கோயில் தரிசனத்துக்காகவும் செல்லவில்லை.

முன் ஆசனத்தில் இருந்த புருஷனைப் பின்னுக்கு வரும்படியும், 'இவள் அந்தப் பெண்ணோடு இருக்கட்டும்' என்று கண்டக்டர் கேட்டுப் பார்த்தான். முன்னுக்கு இருந்த புருஷர் சிறிதும் இசையவில்லை. அம்பலவாணிக்கு அருகில் நெருக்கத்தோடு நெருக்கமாக அவள் இருந்துகொண்டாள். அம்பலவாணியை ஒரு அப்பாவி என்று நினைத்தாளோ! என்ன நினைத்தாளோ! இருந்துவிட்டாள். பஸ் புறப்பட்டுவிட்டது.

முறிகண்டிப் பிள்ளையார் கோயிலில் பஸ் நிற்பதும், ஓடிப்போய்க் கால் கழுவுவதும் எல்லாரும் அறிந்ததே. அங்கே அம்பலவாணிக்குப் பின்னல் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலில் நடக்கப்போகின்ற சம்பவம் அப்படியே நடந்தது. 'ஐயா, உங்கள் மனைவிக்குக் கொடுக்க முன் இந்தப் பிள்ளைக்குச் சிறிது தண்ணீர் ஊற்றுங்கள்' என்று தண்ணீர் அள்ளிய அம்பலவாணியைப் பார்த்து ஒருவர் கேட்டார்.

முறிகண்டியை விட்டு பஸ் சென்றதும் மழை பெய்யத் தொடங்கிவிட்டது. முன் ஆசனத்தில் இருந்த தம்பதிகளுக்குக் கண்ணாடி உடைந்து அற்றுப்போன முற்பக்கத்தால் மழை வீசி உத்தரியம் முதல் உடுப்பு ஈறாக நனைந்துவிட்டது.

பஸ்ஸின் இஞ்சினுக்குத் தண்ணீர் விடுகிற குழாய்க்கு மூடியில்லை. வாழைக் குலையின் அடித்தாரில் செய்யப்பட்ட தற்காலிக மூடியால் அது அடைக்கப்பட்டிருந்தது. அது என்ன மாதிரியோ கழன்று விழுந்துவிட்டது. குழாய்க்குள்ளால் ஒரு வித சத்தத்தோடு கொதிதண்ணீர் வீசியது. இளம் தம்பதிகளின் மழைத் தண்ணீர் வீசிக் குளிர்ந்த முகத்தில், கொதி தண்ணீர் வீசியது பொருத்தமுடைத்தானலும், அவர்களின் மூக்குக்கண்ணாடிகளின் நிலைமையை யோசித்துப்பாருங்கள்.

மாங்குளத்தில் 'இஞ்சின்' கோளாறு பண்ண, 'பஸ் பூரண வேலை நிறுத்தம்' செய்து விட்டது. அவசரமானவர்களையும், பெண்களையும், பின்வந்த பஸ்ஸில் ஒரு மாதிரி அனுப்பினார்கள். [அவசரமானவர்கள் என்றால் கண்டக்டருக்கு அறிந்தவர்கள் என்று அர்த்தம்] அம்பலவாணி பாடு திண்டாட்டமாய்ப் போய்விட்டது. அவளையும்—மனைவியென்று பிறரால் சுட்டப்படுபவளையும் — ஏற்றினார்கள். அவள் அவரை [புருஷனை என்ற கருத்தில்] விட்டு விட்டு எப்படி நான் வருவது எனறு துணிந்து கூறினாள். அம்பலவாணியும் ஏற்றப்பட்டான். அந்தப் பெண்ணின் துணிகரக் கூற்றினல் அன்று அம்பலவாணி போய்ச்சேர்ந்தான் என்றசொல்லுங்களேன்.

* * *

'இவ்வளவு சந்தர்ப்பங்களும், ஈசுவரனலேயே, ஈசுவரனுடைய சந்நிதானங்களிலேயே, எங்களைச் சேர்த்துவைப்பதற்காகவே, அருளப்பெற்றவை' என்ற அவளுடைய வாதத்தை யேற்றுக்கொண்டு அவளுடைய 'மிதந்த முன்' வாய்ப்பற்களையும் பொருட்படுத்தாது, அம்பலவாணி அவளை ஈசுவர சந்நிதானத்திலேயே விவாகஞ் செய்துகொண்டது காதலன்று ஈசுவரலீலையா?

[கதையைத் தலைகீழாகச் சொனனதற்கு வாசகர்கள் மன்னிக்கவேண்டும்]

* * *

### அடிக்குறிப்பு

இதை எழுதிவிட்டு, 'உன்னை மாங்குளத்தில் அவள் புருஷன் என்று சொல்லி ஏற்றிக்கொண்டுபோன சந்தோஷத்தில், நீ, தொண்டைமானுற்றில் அவளை மனைவி யென்று சொல்லி ஏற்றிக்கொண்டு போகப்பார்த்தாய்; ஒரு சமயம் அவர்கள் ஏற்றிக்கொண்டு போயிருந்தால்; பின்பு எந்தக் கோயிலுக்குப் போக எண்ணியிருந்தாய்? என்ற சந்தேகத்தை அவனிடம் நேரிற் கேட்டறியப்போனேன். நான் சென்று செருமினதையும் கவனியாமல் அவர்கள் அறைக்குள் இருந்து சம்பாஷித்த சம்பாஷணையைக் கேட்ட பின் நான் மேலே எழுதின 'இது காதலல்ல' என்ற தலையங்கத்தை மாற்ற வேண்டியிருக்கிறது.

* * *

'நான் ஈஸ்வரனை எதை வருந்திக் கேட்கிறேனே அது நிறைவேறுவது வழக்கம்.'

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

வன சஞ்சாரத்திலிருந்து வெற்றிகரமாகப் பின்வாங்கிய 'கசின்' பழையபடி முருங்கையில் ஏறிக்கொண்டார். இது காதல் அல்ல; சிந்தித்து அனுபவிக்கவேண்டிய ஒரு புது விஷயமென்பதை இதைப் படித்த பின்னர் வாசகர்கள் பலர் முடிவு கட்டுவார்கள். ப—ர்.


விலை அறிவிப்பு

# வூட்வார்ட்ஸ் 'கிறைப் வாட்டர்'

வூட்வார்ட்ஸ் கிறைப் வாட்டரின் உண்மையான சில்லறை விற்பனவு விலை

**ரூபா 2 ஒரு போத்தல்**

[எங்கு உள்ளூர் வரி செல்லுபடியோ அது உட்பட]

கூடுதலாகக் கொடுக்கவேண்டாம்

வூட்வார்ட்ஸ் கிறைப் வாட்டரை நீர் வாங்கும்போது



ஒவ்வொருபோத்தலிலும் இவ்வடையாளத்தைப் பார்த்து வாங்கவும்

போலிகளில் எச்சரிக்கையாயிருங்கள்!

WWI-111 W. WOODWARD LTD. LONDON ENGLAND


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குத் தபால் — நமது நிருபர்

# அச்சியந்திரசாலை விசாரம்

மட்டக்களப்பில் இன்று திருநாடு, பாரதி, லங்கா முரசு என்ற பெயர்களில் மூன்று மாத சஞ்சிகைகள் வெளியாகி வருகின்றன. அவற்றிற்குப் போதிய ஆதரவும் அனுதாபமும் இருந்தும் அப்பத்திரிகைகள் குறித்த காலங்களில் வெளிவருவதில்லை என்ற பெருங்குறை மக்களிடையே உலவி வருகின்றது. இதன் காரணம் குறித்த பத்திரிகைகளை உயர்ந்தமுறையில் அச்சிடுவதற்கான சிறந்த அச்சியந்திரங்கள் இல்லாமையேயாகும். இப்போதுள்ள இரு அச்சியந்திரசாலைகளுக்கும் நிரம்பவேலையுண்டு. இதனை உத்தேசித்து அடுத்து நடைபெறவிருக்கும் கிழக்கு மாகாண ஐக்கிய யூனியன் வருடாந்தர மகாநாட்டில் இப்பகுதியில் ஒரு ஐக்கிய அச்சியந்திரசாலையை நிறுவ முயற்சிக்குமாறு நிர்வாகிகளை வேண்டிக்கொள்வதாக ஒரு பிரேரணை கொண்டுவரப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இப்படி ஒரு திட்டம் ஆரம்பிக்கப்படுமானால் வேண்டிய முதலை வெகு இலகுவாகத் திரட்டிவிடலாம்.

## மதுவிலக்கு

தற்போது கிராமங்களிடையே ஒரு புது விழிப்புக் காணப்படுகின்றது. சில கிராமங்கள் மதுவிலக்கிற்காகப் பெரிதும் முயற்சி எடுத்துவருகின்றன. பாரதிப் பத்திரிகையும் சென்றமுறை மதுவிலக்கின் அவசியத்தை வற்புறுத்தியிருந்தது. இம்முயற்சியில் விபுலாநந்த அடிகளாரின் பிறப்பிடமாகிய காரைதீவும், ஆரையம்பதியும் பெரிதும் முயற்சி எடுத்துவருகின்றன. இவையிரண்டும ஸ்தல வாக்கெடுப்பின் (*Local Option Poll*) மூலம் அங்குள்ள தவறணைகளை ஒழிக்க வழிதேடுகின்றன. இவைகள் ஜூன் மாதத்தின்முன் குறித்த வாக்கெடுப்பைநடத்தி வென்றாலன்றி அடுத்த வருடமும் அவற்றை மூடிவிட முடியாது. இன்னும் ஒருவருடம் தாமதிக்க வேண்டியதுதான்.

## பாலத்தின் மீது

மட்டக்களப்பு நகருக்கு அணியாக அமைந்திருப்பது கோட்டைமுனைப் பாலம். அப்பாலத்துக்கு அழகளிப்பது 'இளைப்பாறியோர் சங்கம்.' இதில் அரசாங்கசேவை, அரசியல், வியாபாரம் முதலிய பல துறைகளிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் அங்கம் வகிப்பதுபோல அவர்களுடைய பேச்சிலும் சாதாரணத தெரு நிகழ்ச்சிமுதல் சிக்கலான அரசியல் பொருளாதாரப் பிரச்னைகள் வரையில் இடம்பெறும். இன்று அவர்களுக்குப் பெருந் தொல்லையளிப்பது 'ஈஸ்ரேண் பஸ் கம்பனி'யாரின் பஸ் வண்டிகளின் பேரிரைச்சல். தவிர, அவர்கள் கண்களை உறுத்துவது குறித்த பஸ் வண்டிகளில் அளவுக்கதிகமாக ஆட்களை அடைந்து செல்வது. இனியாயினும இக் 'கம்பனி' யார் இவ் வயோதிபர்களைத் தொல்லைப் படுத்தாது விடுவார்களா?

## திருகோணமலைத் தேர்தல்

திருகோணமலை நகரசபைத் தேர்தல் சில சட்டப்பிரச்னைகள் காரணமாக இதுவரை பின்போடப்பட்டு வந்தது. முடிவாகச் சென்ற வாரம் குறித்த நகரசபை கூடிய போது திரு. எம். மாணிக்கராசா அவர்கள் தலைவராகவும், திரு. ரீ. மயில்வாகனம் அவர்கள் உபதலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார்கள். தேர்தலை இவ்வளவு காலம் தாமதிக்கச் செய்த சட்டப்பிரச்சனை தேர்தலில் வெற்றி பெற்ற திரு. ந. விஜயநாதன் வாக்காளராக இருக்கத் தகுதியற்றவர் என நீதியரசர் டையஸ் அவர்கள் அளித்த தீர்ப்பேயாகும். இதனைப் படித்த உதவி ஸ்தலஸ்தாபன அதிகாரி ஜனாப் எச். இஸ்மாயில் அவர்கள் ஷை அங்கத்தினரை தலைவர் தேர்தலுக்கு வரும்படி முன் அனுப்பிய அழைப்பை 'வாபஸ்' பெற்றதோடு அந்த அங்கத்தினர் கூட்டத்திற்கு சமுகமளிக்கவும், வாக்களிக்கவும தகுதியற்றவர் என அறிவித்தனர். விஜயநாதன் குறித்த உத்தியோகஸ்தரின் நடத்தைக்கு எதிராக அப்பீல் செய்தார். இதனை விசாரித்த நீதிபதி பஸநாயக்கா, "விஜயநாதன் மேற்கூறிய உரித்துகளுக்குரிமை உடையவர் எனவும், உதவி ஸ்தலஸ்தாபன அதிகாரியின் நடத்தை மன்னிக்க முடியாத தவறெனவும்" தீர்ப்பளித்தார். ஆகவே திரு. ந. விஜயநாதன் தலைவர் தேர்தலில் பங்கெடுத்துக்கொண்டார். ஆனால் அவரது கட்சி தலைவர் தேர்தலில் தோல்வியடைந்தது. வாக்காளராக இருக்கத் தகுதியற்ற ஒருவர் அங்கத்தவராக இருக்கமுடியாதெனச் சட்டம் சொல்லுகின்றது. இன்று ந. விஜயநாதன் சட்டத்தையும் புறங்கண்டுவிட்டார். எதிர்க்கட்சி என்ன நடவடிக்கை எடுக்க விருக்கிறதோ யார் அறிவார்?

## இலவசப் புத்தகம்

மட்டக்களப்புப் பட்டின சபையின் எல்லைக்குள் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தக மளிக்க இந்த நகரசபை பண உதவி செய்யவேண்டும் என்ற பிரேரணையை இரண்டு மாதங்களுக்குமுன் எம். சிவநேசராசா அவர்கள் கொண்டுவந்தார்கள். இப் பிரேரணையின் மீது பலத்த விவாதம் நடந்தபின் இவ் வருடம் இலவசமாக புத்தகங்கள் வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டு அதற்கான மானியமும் ஒதுக்கப்பட்டது. இது நகரசபை மேற்கொள்ளும ஒரு புதுவேலை. ஆதலால் அது ஸ்தல ஸ்தாபன அதிகாரியின் அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டது. இன்னும் அந்த அங்கீகாரம் கிடைக்கத் தாமதப்படுகின்றது. இப்படியான அளவுக்கு மிஞ்சிய சட்ட திட்ட ஒழுங்கு முறைகளினற் பல வேலைகள் ஸ்தல ஸ்தாபனங்களில் தேங்கிக் கிடக்கின்றன. இப்படியானவற்றுள் நகரமண்டபத் திட்டம் என்பதும் ஒன்றென அறியக் கிடக்கின்றது.

## தச்சுத் தொழிற்சாலை

இருவாரங்களின் முன் மண்முனைத் தொடுவாயில் ஒரு தச்சுத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இங்கு ஐம்பது, அறுபது தச்சர்கள் வேலை செய்கின்றனர். இவர்களில் அரைவாசிப்பேர் பட்டணத்திலிருந்து செல்கிறார்கள். இத்தொழிற்சாலை தற்போது ஒரு தற்காலிக கட்டடத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது. இதன் பின்புறமாகக் கடதாசித் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்காக ஆரம்ப வேலைகள் செய்யப்படுகின்றன. இவ்வருடத்தினுள் இத்தொழிற்சாலையும் வேலை செய்ய ஆரம்பித்து விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## மீன்பிடித் தொழில்

இப்பகுதியில் ஏராளமான மீன்பிடித் தொழிலாளர்கள் வசிக்கிறார்கள். அவர்களில் கல்முனைப் பகுதியிலுள்ள மீன் பிடித் தொழிலாளர்கள் மட்டும் சங்கங்களாக அமைத்துக் கொண்டு அரசாங்க உதவியைப் பெற்று வருகிறார்கள். மற்றவர்கள் மிகவும் கஷ்டமான ஜீவனஞ் செய்கிறார்கள். இவர்களுடைய துன்பத்தை நீக்க ஒரு பிரதிநிதிகளும் முயற்சியெடுப்பதாகத் தெரியவில்லை. இவர்கள் இங்கு வேலையில்லாது திண்டாடுகின்றனர். ஆனால் மேற்குக் கரையிலிருந்து வந்த தொழிலாளர்கள் இங்கு வேலை பார்க்கின்றனர். தமிழர் தலைவரெனப் பறைசாற்றிவந்த மீன்பிடிப்பகுதி மந்திரி யாழ்ப்பாணத்துக்கும், திருகோணமலைக்கும் விஜயம் செய்து பல வாக்குறுதிகள் அளித்து மீண்டதும, அதே சமயம் மட்டக்களப்பை மறந்ததும் இங்குள்ள மீன்பிடித் தொழிலாளர் மறக்கக்கூடிய தொன்றல்ல. மந்திரி மட்டுமல்ல; மந்திரியுடன் வந்த டென்மார்க் நிபுணர்கள்கூட இப்பகுதிக்கு விஜயம் செய்யும் பாக்கியத்தைப் பெறவில்லை. மந்திரியும் நிபுணர்களும் எங்கு சென்றாலென்ன இங்குள்ள மீன்பிடித் தொழிலாளர்கள் சங்கங்களை அமைத்துத் தங்கள் குறைகளைப் போக்க முயல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## இது காதலல்ல

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

'ஏன்'

'நான் உங்களையே எனக்குப் புருஷனாக்க வேண்டும் என்று பன்றித்தலைச்சியம்மன் கோயிலிலும், செல்வச் சந்நிதி கோயிலிலும் வருந்திக் கேட்டேன். அப்படியே நிறைவேறினது.

'அப்படியானால் உனக்கு என்மேல் அன்று தொடக்கம் காதல் தானா?'

'ஏன் உங்களுக்கு இல்லையா?'

'பஸ்ஸுக்குள் நடந்த லீலைகள் எதைக்குறித்தது?'

'நான் நினைத்தேன், ஒரு வேளை எனதுமிதந்த........'

'அப்படியெல்லாமில்லை. அடுத்த வீட்டுப் பொன்னம்மாவின் மிதந்த பல்லை நான் பழிப்பதைக் கண்டு, அம்மா அப்பவே சொல்லிவிட்டாள் 'உனக்கு மிதந்த பல்லுக்காரி ........' ".......... வசமானல்........"






தேக மலர்ச்சியே
அவரை தகுதியும் தந்நம்பிக்கையும் உடையவராகச் செய்கிறது.

இன்னொரு வழக்கிலும் அவர் வெற்றிபெற்ருர்! எல்லோரும் அவரது வாய் சாதுரியத்தையும் தந்நம்பிக்கையையும் போற்றினர்கள். அவர் தினமும் லைப்பாய் பாவித்து ஸ்நானம் செய்கிருர். அதன் செழிப்பான சுறுசுறுப்பையளிக்கும் நுரை சருமத்துவாரங்களில் ஊடுருவிப்பாய்கின்றது. அதனாலேயே அவர் புத்துணர்ச்சியுடன் தேக மலர்ச்சியையும் பெறுகிருர். இதர ஸ்நான சோப்புகளைவிட லைப்பாய் 20% காரம் குறைந்தது. முகம் கைகள் கழுவ மிகச்சிறந்தது.

இதனால் தான் அவர் பாவிக்கிருர்
லைப்பாய்
டாய்லட் சோப்
LBT. 20-169 TM

ஆசிரியருக்குக் கடிதம்

## தோட்டத்திலே துரைத்தனம்

ஆசிரியப்பா

ஈழ நகரில்
நீளப் புகழுடை
ஈழகே சரியின்
இயைந்தவா சிரிய!
தோட்டவா ரிவிற்
றுரைத்தனம் வகிக்குந்
தேட்டம் மிக்குடைச்
சிற்சில விகிதர்
செய்யுமக் கிரமம்
சொல்லுந் திறனல;
கையும் மெய்யுமாய்க்
கண்டனன் சிலரை
தாட்சண்ய மின்றிப்
பிறாக்குவந் தடுக்கும்
'காட்'டொடு புதினஞ்
சாகிதா திகளை
அச்சம திண்றிக்
கெச்சித மாயெடுத் (த)
இச்சையே தீர
'இடக்'கெனப் பிரித்துப்
படிக்கும் பான்மை
பகரவும் படுமோ!
படித்தபி னவற்றை
உரியவர்க் காக்குந்
தன்மையு மிலராய்த்
தயங்குகின் றனரே.
இன்னவர்க் கறிவுதா
னென்றினி வருமோ!

எம். கே. சூரியன்

இதல்ஹாசின்னை,
2-3-49

### தேவை

யாழ்ப்பாணப் பகுதி ஆனைக்கோட்டையிலுள்ள வயோதிபர் இல்லத்துக்கு ஒரு பெண் பணியாளர் (Attendant) தேவை. மாத வேதனம் ரூபாய் 30/-. உணவு, விடுதி இலவசம். விண்ணப்பதாரர்கள் 40 வயதுக்கும் 45 வயதுக்கும் இடையேயுள்ளவராக வேண்டும். இனப்பாறியிருக்கும் தகுதிபெற்ற தாதிமாராயின் சலுகை காட்டப்படும். விண்ணப்பப் பத்திரங்கள் கீழ்க்காணும் விலாசத்துக்கு 22-3-49 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

Secretary
King George V Silver Jubilee
Memorial Society Ltd.
Kachcheri, Jaffna.

## நவாலி சைவமகாசபை

நவாலியிலுள்ள இந்துக்களின் பொதுக்கூட்டமொன்று 23-2-49, புதன்கிழமை மாலை 6 மணிக்கு நவாலி சிந்தாமணிவிநாயகர் கோவில் மண்டபத்திற் சைவப் பெரியார் தம்பையா உபாத்தியாயர் அவர்கள் தலைமையிற் கூடிற்று.

தேவார திருவாசக முதலியவற்றை முறைப்படி ஓதவும், ஓதுவிக்கவும், புராண இதிகாசங்களைப் படிக்கவும் கோவில் பஜனை செய்யவும், நவாலியிலுள்ள இந்துக்கள் பங்கு பற்றுவதற்கு, ஓர் சபை அவசியமென்பதைத் திரு. வ. மகேசன் தெரிவித்தனர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழகேசரி

சுன்னுகம், சர்வதாரி, மாசி ௩०

— காந்தி ஆண்டு 80 —


## தொழில்களைப் பாதுகாத்தல்

இலங்கையின் செல்வ நிலையானது தொழில் விருத்தியிற்றுன் முழுவதும் தங்கியிருப்பது. இலங்கை சுதந்திரத்தைப் பெற்றபின், அரசினர் கடமை இவ்விஷயத்தில் அதிகரித்துக்கொண்டு வருகின்றதென்றே சொல்ல வேண்டும். தொழில்களை ஆரம்பிப்பது மாத்திரமல்ல, ஆரம்பிக்கப்பட்ட தொழில்கள் நாளடைவில் வேறு பல அடாத காரணங்களால் இறந்தொழியாது பாதுகாப்பதும் அரசினர் கடமையாகும். இவ்விஷயத்தில் அரசினர் அளவுகடந்த சிரத்தை யெடுக்காதுவிடின் பெருநட்டமும் செல்வச் சுருக்கமும் நமது நாட்டிற்கு வந்து சேர்வது நிச்சயம். இத்துறையில் அரசினர் மிக விழிப்பாக விருந்து வேண்டிய வேண்டிய முறைகளைக் கையாண்டு உள்நாட்டுத் தொழில்கள் தடைதாமதமின்றி நிலைபெறச் செய்வது அவசியம். இதை அரசினர் அறியாதிருக்கவில்லை.

இப்போது, இலங்கையரசினர் தொழில் அபிவிருத்தியைத் துரிதப்படுத்தவும் அந்நிய நாட்டுப் பொருட்கள் இறக்குமதியைக் கட்டுப்படுத்தவும் வேண்டிய ஒழுங்குகள் சட்ட முறையாற் செய்துள்ளார். ஆரம்பத்தில் புறநாட்டுப் பொருட்களுடன் போட்டி செய்வது இயலாதகாரியம். ஆகவே, இலங்கையிற் செய்யப்படும் பொருட்களை எல்லோரும் உபயோகிக்கச் செய்வதற்கு இறக்குமதியாகும் பொருட்களைக் கட்டுப்படுத்த வேண்டியதுதான். இவ்விஷயம் செய்து முடிப்பது இலகுவான தொன்றன்று. பொதுமக்களின் உபயோகத்துக்கு அவசியம் தேவையான பொருட்களைக் கட்டுப்படுத்த முன்னர், அவைகள் உள்நாட்டிற் போதியளவு பெறக்கூடியனவா என்பதை அரசினர் ஆராய்ந்து நோக்க வேண்டும். அத்துடன் ஏற்படுத்தப்படும் கட்டுப்பாடு எத்தன்மையதாகும் என்பதையும் நன்கு ஆராய்ந்து செய்யவேண்டும். ஆராய்வின்றிச் செய்யின் அளவுகடந்த முட்டுப்பாடுகளும் பிணக்குகளும் ஏற்படுவது நிச்சயம்.

இலங்கையில் ஆரம்பித்து நடத்தப்படும் தொழில்களை நோக்கி அவைகட்குப் பாதுகாப்பு எப்படி ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதைக் காலத்துக்குக் காலம் ஆராய்ந்து முடிவு செய்ய அரசினர் ஓர் அதிகார சபையை நிறுவியுள்ளார். எந்த எந்தப் பொருட்கள் எந்த எந்த முறையில் எவ்வளவுக்குப் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதை இச்சபையினரே முடிவு செய்வார். மேலும் இப்பொருட்களைப் புறநாடுகளிலிருந்து தருவிக்கும் வியாபாரிகள் தமது இறக்குமதிக்கு ஏற்ப உள்நாட்டிற் கிடைக்கப்படும் அப்பொருட்களையும் விலைக்கு வாங்கி விற்கவேண்டும் என்ற நியதியும் புதிய சட்டத்திற் காணப்படுகின்றது. இது அவசியமான அம்சம் என்பதிற் சந்தேகமில்லை. தமது பொறுப்பில் தொழில்களை ஆரம்பிக்கும் முதலாளிகளும் கூட்டுறவுச் சங்கங்களும் தமது ஸ்தாபனங்களை அரசினருடன் பதிவு செய்துகொள்ள வேண்டியது மிகப் பிரதானம். எனவே, தொழில் முதலாளிகளும் அரசினரும் இவ்விஷயத்தில் ஒற்றுமையாக உழைத்தாற்றுன் விரும்பிய நன்மைகள் கைகூடும். அரசினரின் உதவியின்றித் தொழில் விருத்திசித்திக்குமென்பது ஒருபொழுதும் இயலாத விஷயம்.

இத்துடன் விரும்பிய நன்மை முற்றாகக்கிடைத்துவிடப் போகின்றதேயென எண்ணுவதும் மனக்கோட்டைகட்டுவதேயாகும். இலங்கையிற்செய்யப்படும் கைத்தொழிற் பொருட்களின் தன்மையிலேயே எல்லாம் தங்கியுள்ளன. இறக்குமதியாகும் பொருட்களுடன் விலையில் மாத்திரமன்று குணத்திலும் தோற்றத்திலும், பெலத்திலும், உள்நாட்டுப் பொருட்கள் நின்றுபிடிக்கக் கூடியனவாக அமையவேண்டும். இவ்விஷயத்தை ஆரம்பத்திற் செய்துமுடிக்க இயலாவிடினும், இதனை இலக்காகக்கொண்டே நடத்தப்படவேண்டும். அரசினர் பாதுகாப்பை நீடித்து வைத்துக்கொள்வ தெப்படி? காலகதியில் இப்பொருட்கள் எவ்வித உதவியுமின்றித் தாமே நிமிர்ந்து நின்று நிலவக்கூடியனவாக இருக்க வேண்டும். குறைந்த விலையிற் சிறந்த பொருட்கள் செய்யப்படும் நாடுகள்தான் செல்வம் நிறைந்த நாடுகளாகின்றன. அரசினர் பாதுகாப்பு இருக்கின்றதேயென நினைத்துப் பணத்தையீட்ட இதுதான் சமயம் என்று கருதி உதவாத பொருட்களைத் தயாரிக்க ஆரம்பித்தால், நாளடைவிற் பெருந் தீமையாகவும் நட்டமாகவுமே முடியும்.

இப்புதிய சட்டத்தால் சில பொருட்களின் விலை ஒருவேளை அதிகரிக்கக்கூடும். பின்வரும் பெரு நன்மையை நோக்குமிடத்து இவ்விலையேற்றம் அற்பமென்றே கூற வேண்டியிருக்கின்றது. மேலும் அரசினர் பாதுகாப்புக்கள் ஏற்படுத்துங்கால் மிக சாக்கிரதையாக இருக்க வேண்டும். தொழிலாளரின் நன்மைகளை மாத்திரமன்று, பொதுமக்களின் வசதிகளையும் நோக்கவேண்டும். திருத்தமடைந்து, காலகதியில் அந்நியநாட்டுப் பொருட்களுடன் போட்டியிட இயலும் என்ற தொழில்களுக்குத்தான் அரசினரின் சிறந்த பாதுகாப்புக்கள் அவசியம். அப்பொழுதுதான் சிறந்த பொருட்களைத் தயாரிக்க வேண்டுமென்ற மனப்பான்மை தொழில் முதலாளிகட்கு ஏற்படும். வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருட்களைக் கட்டுப்படுத்துவதில் அரசினர் சாவதானமாக நடந்துகொள்ள வேண்டும். தேவையையும், கிடைக்கக்கூடிய வசதிகளையும் நன்று நோக்கி ஆகவேண்டிய ஏற்பாடுகள் செய்வதே முறையாகும்.

## நோக்கமில்லாதிருக்குமா?

யுத்தத்தின்காரணமாகப் பொருளாதாரநிலை சீர்குன்றிய நாடுகட்குப் போதிய பணவுதவியளிக்க அமெரிக்கா முன்வந்துள்ளது. பணவுதவி மாத்திரமல்ல, தொழில் விருத்திக்கு இன்றியமையாத உபகரணங்களும் அவைகளை நடத்த நிபுணர்களும் வழங்கவுந் தயாராம். இவ்வாறு கிடைக்கும் உதவியைப் பயன்படுத்தாது விடுவதெப்படியென்று அநேக ஆசியாதேச நாடுகள் யோசிக்கின்றன. அமெரிக்காவுடன் போட்டி செய்யும் ருஷியரும் மற்றைய கிழக்கு ஐரோப்பிய நாட்டினருஞ் சேர்ந்து அமெரிக்கரின் முயற்சிக்குக் காரணங்கள் கூறித் தடைசெய்யப் பார்க்கின்றனர். இலங்கையரசினரும் இவ்விஷயமாக என்ன செய்வதென விழிக்கின்றனர். அமெரிக்கரின் உதவியைப் பெறுவதா, விடுவதா, என்பதுதான் கேள்வி. கிழக்குதேச நாடுகள் இந்த உதவியை இப்போது பெறின் பின் பொருளாதார விஷயங்களில் நிரந்தர அடிமையாக இருக்கவேண்டுமென எடுத்துக் காட்டப்படுகின்றது. அமெரிக்கர் இப்போது கொடுக்க முன்வரும் பணம் பின் வட்டியோடு திருப்பிக் கட்டப்படவேண்டுமென்பது உண்மையாயினும் உதவியைப் பெற்ற மாத்திரத்தில் அமெரிக்கருக்கு மனதிலாவது அடிமையாகவேண்டியதுதான். உலக விவகாரங்கள் முடிவுசெய்யுங்கால் அமெரிக்கரைச் சார்ந்து நிற்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படக்கூடும். மேலும் அமெரிக்கா ஆசியாநாடுகளில் ஏன் இவ்வளவு உருக்கம் காட்டவேண்டுமென்று கேட்கின்றனர். தமது பக்கத்தில் அநேக நாடுகளை வைத்துக்கொண்டால் உலகில் முதன்மையைப் பெறலாமென்பது அமெரிக்கர் நோக்கமாகலாம். மேற்கு ஐரோப்பிய நாடுகட்கு அமெரிக்கா பணம் கொடுப்பதும் இப்படியே விளக்கப்படுகின்றது. இலங்கையில் அதிகாரத்தை நடத்துங் கட்சியினருக்கும் இவ்விஷயம் ஏற்றதாகும். பிரிட்டனின் வாலைப் பிடிப்பவர்கள் இப்போது அமெரிக்காவின் உதவியையும் பெற்றால் என்ன தீமை வந்துவிடுமோ!

## பாதை ஓரத்தில்




காங்கேசன்துறையில் உள்ள காசநோய் வைத்தியசாலையிற் சிகிச்சை பெறும் தமிழ் அன்பர்கள், அங்கு பொழுதுபோக்குவதற்கு மிகவுங் கஷ்டப்படுகின்றனர். நல்ல புத்தகங்களைப் படித்துப் பயன்பெறலாமெனச் சிலர் ஆசைப்பட்டாலும், எளிய நடையில் எழுதப்பட்ட நல்ல **தமிழ்ப் புத்தகங்கள்** அங்குள்ள வாசிகசாலையில் மருந்துக்குமில்லையாம். ஆனால், அதே நிலையத்திற் போதியளவு ஆங்கில நூல்களும், சிங்களப்புத்தகங்களும் உள.

தமிழர்கள் மிகுந்த ஓர் இடத்திலே தமிழ்ப் புத்தகங்கள் இல்லையென்றால் அது வெட்கமான ஒரு காரியம். எங்களில் அநேகரிடம் படித்து முடிந்த புத்தகங்கள் பல, தேடுவாரற்று மேசைகள் மீதும், வீட்டு மூலைகளிலுங் குவிந்து கிடந்து அவஸ்தைப் படுகின்றன. அவற்றையெல்லாம் எடுத்துச் சிரமத்தைப் பாராது நூல் நிலையப் பொறுப்பாளர், காசநோய் வைத்தியசாலை, காங்கேசன்துறை; என்ற விலாசத்துக்கு அனுப்பிவைத்தாற் கோடி புண்ணியங் கிடைக்குமல்லவா?

❀

### இது சகஜம்

கொழும்பிலே வேலைபார்க்கும் அரசாங்க ஊழியர்கள் யாழ்ப்பாணத்துக்கு 'லீவு' எடுத்துக்கொண்டு வருவது வழக்கம். அவர்கள் செய்த பாவமோ, புண்ணியமோ தெரியாது, ஊர் வந்தடைந்ததும் அவர்களைப் பலவிதமான வியாதிகள் பீடித்துக்கொள்வது சகஜம். பின்னர் யாழ்ப்பாணத்திலே தங்குவதற்கென 'லீவு' நாட்களைமேலதிகமாகப் பெறுவார்கள்.

❀

### 'இந்துபோட் ஆசிரியர்கள்

அந்த மாதிரியான சில சில்லறை வியாதிகள் 'இந்துபோட்' உபாத்திமார் பலரைச் சிறிது காலமாகப் போட்டலைக்கின்றதாக அறிகின்றேன்.

தலைவலி, பல்வலி, வயிறுக்குத்து, வாய்வுச் சேட்டை ஜலதோஷம், நெஞ்சுத் தடிமன், வயிற்றெரிச்சல் போன்ற உரோகங்கள் 'இந்துபோட்' உபாத்திமார் பலரைப் பிரதி மாதமும் ஒழுங்காகப் பீடித்து வாட்டுகின்றனவாம்.

மலேரியா என்ற காட்டுச் சுரத்தை அகற்றுவதற்கு டி.டி.ரீ. கண்டு பிடிக்கப்பட்டது. இதன் உதவியால் அக்கொடிய சுரம் அதிகமாகப் பரவுவதில்லை.

இதையறிந்த 'இந்து போட்' நிர்வாகிகள் அதிக ஆராய்ச்சியின் பின் (பணச்செலவு உட்பட) என்.பி.எல். ('நோ பே லீவ்') என்ற அரிய திராவகத்தைக் கண்டு பிடித்திருக்கிறார்களாம். இதற்கு நல்லெண்ணெய் தள்ளுபடியல்ல. இத்திராவகத்தை 'இந்துபோட்' விநியோகித்து வருவதால் 100 க்கு 80 சதவிகிதமான ஆசிரியர்கள் சுகமடைந்து வருகின்றனர். இதையறிந்து மாணவர்கள் வருந்தக் கூடும். ஆனால் நாடு மகிழ்ச்சியடைகின்றது.

இனி 'இந்துபோட்' ஆசிரியர்கள் மாயமாக மறைந்து கொள்வதைப்பற்றி அடுத்தவாரம் கூறுவேன். பொறுமையாக இருங்கள்.

### கடல் நீரிலிருந்து 'பெட்ரோல்'

இந்தியன் ஒருவர் கடல் நீரிலிருந்து 'பெட்ரோல்' கண்டுபிடித்துள்ளார். இதுபற்றிய முழு விபரங்களும் அடுத்தவாரம் ஈழகேசரியில் வெளியாகும்.

# காவியமும் ஓவியமும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி).

வாழ்க்கைக்கு உயிர். மக்கள் தமக்கு எந்த எந்தப் பொருள்களால் இன்பம் கிடைக்கும் என்றெண்ணிப் பெருமுயற்சி செய்கின்றார்களோ அந்தப் பொருள்கள் சிலசமயங்களில் தெவிட்டிவிடும். மதுகலசத்தை விரும்பாத சமயமும் உண்டு. மனைவியின்பம்சலிக்கும்பொழுதும் உண்டு. இன்ப வாழ்க்கைக்கிடையே இந்தச் சலிப்பு ஒருகணம் இருந்தாலும் இடையறவு பட்டுவிடும். பிறகு அது இன்ப வாழ்க்கையாகாது. ஆதலால் இடையறவுபடாத இன்பத்தை உண்டாக்க ஒருபொருள் வேண்டும். அதுதான் **கவிதை**. மது நுகர்ச்சியால் வரும் இன்பம் உள்ளபொழுதிலும் அந்த இன்பத்தை மிகுவிக்கக் கவிதை உதவுகின்றது. பெண்ணினினிமையை உணரும்செவ்வியிலும் கவிதை அவ்வினிமையை ஒன்று பத்தாகப் பெருக்குகின்றது. எல்லா இன்பங்களும் சலித்துப்போனநிலையிலும் தானே தனிநின்று இன்பத்தை உண்டாக்குகின்றது கவிதை. இந்த இன்பத்துக்குச் சலிப்பு இல்லையா? இல்லை. ஆயும்தோறும் இன்பம் தருவது கவிதை. மனிதவாழ்வில் அவனுடைய குறைகளையெல்லாம் மறக்க வைப்பது கவிதை. உலகத்திலுள்ள பொருள்களின் குறைகளையெல்லாம் அழகுபடுத்திக் காட்டுவது கவிதை. துன்ப நிகழ்ச்சிகளில் உள்ள துன்பத்தைப்பற்றி இரசித்து அனுபவித்தற்கேற்ற பொருளாக அவற்றை ஆக்கி விடுவது காவியம். உலகில் உள்ள பாலைவனம் சுடுகின்றது. நினைத்தாலும் உள்ளம் வேகும் என்று மனிதர்கள் அஞ்சுகின்றார்கள். ஆனால் அந்தப்பாலைவனத்தைக் கவிஞன் தன் காவியத்தில் வருணித்திருக்கின்றான். அவனுடைய சிருஷ்டியாகிய பாலைவனத்தில நாம் பலகால் செல்ல எண்ணுகின்றோம். அத்துடன் நில்லாமல் சென்று சென்று இன்புறுகின்றோம். உலகில் ஈஸ்வர சிருஷ்டியில் உள்ள பாலைவனத்தின் வெம்மையைப் போக்கி, அதற்கு இனிமையை உண்டாக்கி விடுவது கவிஞனது சிருஷ்டியாகிய காவியம். கவிஞனது சிருஷ்டியிலே பலமூலப்பொருள்கள் இல்லை. உலக சிருஷ்டிக்காதாரமாக 92 மூலப் பொருட்கள் உண்டென்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். எல்லாம் பஞ்சபூதத்தின் விளைவென்று தத்துவ நூல் சொல்லுகின்றது. காவிய உலகின் மூலப் பொருட்கள் இரண்டே. அவைசொல், பொருள்; அவற்றைத் தனித்தனியே பிரித்துக் கூறுவது மிகவும் பிழை. சொல் என்றாலே பொருளும் உள்ளடங்கித்தானே இருக்கின்றது. சொல்லின்றிக் கவிப்பிரபஞ்சத்தில் பொருள் இல்லை. பொருளின்றிச் சொல்லில்லை. இவ்விரண்டைக் கொண்டும் கவிஞன் அமரனைச் சிருஷ்டிசெய்கின்றான். அசுரனைக் காட்டுகின்றான். அழுகைவருகின்றது. அதன்பின் இன்பம்இருக்கின்றது.

"சொற்பாவும் பொருள்தெரிந்து
தூய்மை நோக்கித்
தூவகாதார் மனத்திருளை
வாங்கா தானே"

என்பது அப்பர் சுவாமிகள் திருவாக்கு. ஓவியக் கலையும் காவியத்தைப் போன்று தனக்கென ஒரு தனி யுலகைக் கொண்டது. கண்ணினாலே காணப்படும் பொருளை உள்ளது உள்ளபடியே 'போட்டோ' படமாகக் காட்டுவதைவிட உணர்ச்சியையும் கருத்தையும் புலப்படுத்தும் சில வகைக் குறிப்பினுற் காட்ட வேண்டுமென்பது ஓவியப் புலவனது நெறி. கவிதையிலே தளிர்போல மெலிந்த விரல்களையும் கொடிபோல் நுடங்கிய இடைகளையும் கண்டு அதன் மென்மையை உணர்ந்து கொள்கின்றோம். ஆனால் ஓவியத்தில் விரல்களைச் சற்று நீளமாகவும் துவண்டனவாகவும் கண்டால் இது இயற்கைக்கு மாறுனது. என்று கூறுகின்றோம். கவிஞன் தளிர்போன்ற விரல் என்று சொல்வதையே ஓவியப்புலவன் சித்திரத்திலே காட்டுகின்றான் என்பதை நாம் சற்று ஊன்றிநோக்கி உணர்ந்தால் அதையும் அனுபவிக்கமுடியும்.

நாம் நம் நாட்டுக்கலையை மறந்து விட்டோம். அதனால் அது புதிதாகவும் இயற்கைக்கு மாறாகவும் படுகின்றது. இந்திய ஓவியம் உள்ளுறைப் பொருளோடு நிற்பது. அதுதான் அதற்கு உயிர். இந்த நாட்டுச் சிற்பமும், ஓவியமும், கோலமும் கூத்தும் காவியமும் புராணமும் இந்தக் குறிப் பொருளை உடையனவாக இருப்பதினுற்றான் பிறநாட்டினர்க்கு விளங்காத புதியனவாக உள்ளன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வீர சுதந்திரக் குடியரசு

## வேலைநிறுத்தம் வேண்டாம்

**- இந்தியா -**

இந்தியாவின் அரசியலமைப்பு என்னவாகுமென்று இந்தியப் பிரதமர் நேருஜி அவர்கள் இப்போது வெளிப்படையாகவும் தெளிவாகவும் கூறியுள்ளார். சமீபத்தில் ஜெயபுரிக் காங்கிரஸ் மகாசபை தீர்மானித்ததுபோல் இந்தியாவில் ஓர் பூரண சுதந்திரம் பெற்ற குடியரசு (Republic) அமைக்கப்படுமாம், அது உள்நாட்டு விஷயத்திலாவது, புறநாட்டு விஷயத்திலாவது பொருளாதார விஷயத்திலாவது, அரசியல் விஷயத்திலாவது வேறு இன்னெரு நாட்டுக்கு அடிமையாக இருக்கமாட்டாது. இம்முறையில் இருந்துகொண்டு இந்தியர் மற்றைய நாடுகளுடன் நட்புரிமைபெற்றுச் சமத்துவமாக நடந்துகொள்வதில், பின்னிற்கவும் மாட்டாது. இவ்விஷயத்தைப்பற்றிய முடிவு விரைவில் நிதானிக்கப்படும். அரசியலமைப்புச் சபையில் இவ்விஷயம் விரைந்து கையாளப்படுமெனப் பண்டித நேரு கூறினர். இத் தீர்மானத்தைப் பிரிட்டிஷார் பிழையாக விளங்காதிருக்கவேண்டியதே. ஏகாதிபத்தியத்துள் அடங்கியிருக்கப் பெரிய பாரம் பரியமுள்ள இந்தியா எப்படி உடன்படும்? சமத்துவமான உரிமைகளைப் பெற்று சுதந்திரம் பெற்ற நாடுகளுடன் இணங்கி உலக சமாதானததை இந்தியா என்றும் போற்றிவரும்.

### ஆசியாவின பெருமை

ஐரோப்பாவில் இடைவிடாது பெரிய பிணக்குகளும் யுததங்களும் தோற்றிச்சமாதானத்துக்குப் பங்கம் ஏற்படுவதற்குப் பிரதான காரணத்தை யறியவேண்டும். ஐரோப்பியர் பொதுவாக மற்றைய நாடுகளின் சுதந்திரத்தைக் கெடுத்து அக்நாடுகளைச் சுரண்டியே வாழ்கின்றனர். இதனுற்ருன் மேலைத்தேச நாடுகட்கிடையிற் போட்டியும் அதன்பேருகத் தகராறுகளும் யுத்தங்களும் ஏற்பட்டு விடுகின்றன. ஆசியாவில் இந்தக் கொடுமை கிடையாது. ஒரு நாட்டினை இன்னெரு நாடு அடிமைப்படுத்துவதை அங்கு காண்பது இயலாது. ஐரோப்பிய நாட்டினர் எத்தனை ஆசிய நாடுகளை அடிமைப்படுத்துகின்றனர். இந்த இழிந்த வேலையை இன்னும் கைவிடவில்லை. எனவே இவ் விஷயங்களில், கட்சிகட்டிப் பிணக்குப்படும் மேலைத்தேசத்தவருடன் இந்தியா ஏன் சேர்ந்து துயரை யடைய வேண்டுமோ? கீழைத்தேச நாடுகள், பிரதானமாக இந்தியா, தனித்து நின்று அதிகாரத்தைச் செலுத்துவதால் உலக சமாதானத்தை நிலைநாட்ட மிகவும் வசதிகளைப் பெறும். இப்போது மேலைத்தேசத்தவர் இரு கட்சியாகப் பிரிந்து பல விஷயங்களிலும் முரண்பாட்டினை அடைந்து வருகின்றனர்.

### சுதந்திரம் பெற்ற நாட்டில்

இதுவரையுந்தான் இந்தியா ஐரோப்பியர் முதலிய மேலைத்தேச நாட்டினர் வேட்டையாடிச் செல்ல நிலைக்களமாக விருந்தது. பூரண சுதந்திரத்தை இந்தியா பெற்று பிரிட்டிஷார் எல்லாச் சொத்தையும் சுதந்திரத்தையும் கையளித்துவிட்டுத தாமாகவே வெளியேறி விட்டனர். அப்படியான நிலையில் மற்றைய ஐரோப்பிய அரசினர்கட்கு அங்கு இடமேது? இந்தியாவிற் சிற்சில இடங்கள் பிரான்ஸியர் போர்த்துக்கேயரின் ஆட்சியில் இருக்கின்றன. இவைகளும் இந்தியாவுடன் சேர்ந்து சுதந்திரததை அனுபவிப்பதே முறை. புதுச்சேரி, காரைக்கால் மாஹி, கோவா என்பன அவற்றுள் பிரதானமானவை. இவ்விடங்களில் வசிப்போர் பெரும்பான்மையும் இக் கூக்கள். இந்தியாவுடன் சேர்ந்து

சுதந்திரமாக வாழும் விருப்புடையர். இப்பிரதேசங்களை அரசு புரிவோர் இன்னும் தமது அதிகாரத்துள் வைத்திருக்கலாமெனக் கனவு காண்கின்றனர்.

### பர்மாவின் மனப்பான்மை

மிக்க அரசியற் பிணக்குகள் ஏற்பட்ட இச்சமயத்தில் பர்மா தேச அரசியல் வாதிகள் இந்தியா முதலிய நாடுகளின் புத்திமதியைப் புறக்கணிப்பது எப்படிப் பொருந்தும்? இப்போது பர்மாவில் இரு கட்சிகள் உள. ஒன்று கொம்யூனிஸ்ட் மற்றையது அரசியலை நடத்துங்கட்சி. இவர்கட்கிடையில் ஒருவித சமாதானத்தை நாட்ட இந்தியா, இலங்கை, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் முதலிய அரசினர் சில யோசனைகள் கூறினர். அதைத் தற்போதைய பர்மா அரசினர் முற்றாகக் கைக்கொள்ளவில்லை. கொம்யூனிஸ்ட் கட்சியினரை அடியோடு தொலைக்கும் வரையும் தாம் ஆறியிருக்கப் போவதில்லையாம். அவர்களோடு என்ன இணக்க மென்றுங் கேட்கின்றனர். உள்நாட்டு அரசியற் கலகத்தால் ஏற்பட்ட நட்டங்கட்கு எல்லையில்லை. மேலும் பர்மாவில் இக்கலகம் விரைவில் சாந்தியடையுமென நிச்சயமாகக் கூற வியலாது. அயல் நாடுகளாகும் சீயம், மலாயா, இந்தியா இலங்கை பாகிஸ்தான் என்னும் நாடுகள் தமது உணவுப் பொருட்களுக்கு இந்நாட்டினையே எதிர் பார்ப்பன.

### வேலை நிறுத்தங்கள்

இந்தியாவின் எத்தனையோ இடங்களில் புகைரதப் பகுதித் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானித்துள்ளார். பம்பாய்ப் பகுதியில் ஆரம்பித்த வேலை நிறுத்தம் நினைத்தபடி வாய்க்கவில்லையாம். தென்னிந்திய புகைரதப் பகுதித் தொழிலாளரின் வேலை நிறுத்தம் திங்கட்கிழமைக்குப் (14-3-49) பின் போடப்பட்டிருக்கின்றது. கொம்யூனிஸ்ற் கட்சியினர் உள்ளபடி தொழிலாளர்க்காகப் பாடுபடுகின்றூரா அல்லது அரசியல் அதிகாரத்துக்காக நடிக்கின்றூரா என்பதை இதுவரையில் இந்த ஏழைத் தொழிலாளர் அறியவில்லை. போக்குவரவு வசதிகளை நிற்பாட்டிவிடின் எவ்வளவு கஷ்டங்கள் ஏற்படக்கூடும். உணவுக் கஷ்டமும பல்வேறு ஆபத்துகளும் ஏற்பட்ட இச்சமயத்திலா தொழில் நிறுத்தத்தை ஆரம்பிப்பது?

## ஆபத்து அதிகரிக்கின்றது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

**தில் இந்தியா கூட்டிய ஆசிய மகாநாடு ஒன்றே போதுமான எடுத்துக்காட்டு.** ஆகையால் உலக சமாதானத்தையே முக்கிய இலட்சியமாகக் கொண்டு எந்தக் கோஷ்டியுடனும் சேர மறுக்கும் இந்தியா உலக மக்களின் சமத்துவத்துக்காகவும், சுதந்திரத்துக்காகவும் போராடியே தீரும்......''

### இலங்கைப் பிரதிநிதி

இரண்டாவது முறையாகக் கூடப்பெறும் ஆசிய மகாநாட்டைப்பற்றி இலங்கைப் பிரதமர் சேனநாயகாவுக்கு உத்தியோக பூர்வமான செய்தி கிடைக்கவில்லையெனத் தெரிகின்றது. முதலாவது மகாநாட்டுக்கு மந்திரி பண்டாரநாயகா இலங்கையின் பிரதிநிதியாக மகாநாட்டிற் பங்குபற்றினர். இம் முறை ஒரு சமயம் சேர் அருணசலம மகாதேவா இலங்கையின பிரதிநிதியாகக் குறித்த மகாநாட்டிற் பங்குபற்றக்கூடும்.

முதலாவது மகாநாட்டில் மந்திரி பண்டாரநாயகா மிகத் திறமையுடன் காரியங்களை நடாத்திவிட்டுப் புகழுடன் ஊர் திரும்பியது வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

### திருமணம்

**ஆதிநாகப்பன்—ஜானகி**

சொக்கநாதபுரம், திரு. சுப ஆதினமிளகி செட்டியார் புதல்வனும், கோலாலம்பூர் தமிழ்நேசன் ஆசிரியருமான செல்வன் **ஆதிநாகப்பனுக்கும்** திரு. தெ. முத்தையா தேவர் புதல்வி செல்வி ஜானகிக்கும் 16-3-49 புதன்கிழமை காலை மணி 9-க்கு மேல் 10-க்குள்ளாக, கோலாலம்பூர் செந்தூல் செட்டியார் மண்டபத்தில் திருமணம் நடைபெறும்.

### நகைச்சுவையரசு

நகைச்சுவையரசு என். எஸ் கிருஷ்ணன், மதுரம் அவர்களுடன் வெள்ளிக்கிழமை பிற்பகல் விசேஷ விமானமூலம் கொழும்பு வந்தடைந்தனர். அன்று இரவு திரு. கிருஷ்ணன் அவர்கள் கொழும்பு வானெலியிற் பேசினர். **கொழும்பு தமிழ் யூனியன்** கூட்ட உதவி நிதிக்காகத் தமது நடிப்புமூலம் பணம் சேகரித்துதவ இப்பெரியார் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

# சங்கீதமும் சடகோபனும்

அன்பர் கானரத்தினம்

சடகோபன் அவர்கள் சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது, இசை சம்பந்தமான பல உண்மைகளை அவரிடமிருந்து தெரிந்துகொண்டேன். தமிழ் நாட்டிலும், ஈழநாட்டிலுமுள்ள சங்கீத இரசிகர்களும், ஏனைய அன்பர்களும அவற்றை அறிந்து கொள்வதற்காக இதை எழுதலானேன்.

கலையாக்கத்திலும், இசை வளர்ச்சியிலும ஈடுபட்டுக் கொள்வது இக்காலத்திலே மதிப்பைத் தரும ஒரு பண்பாடாகி விட்டது! இவற்றினும் மேலாகத் தமிழ் இசை இயக்கம் தமிழகத்திற் பரவி வரும் இக்காலத்திலே ஸ்ரீ வி. வி சடகோபன் அவர்கள் தெரிவிக்கும் சில கருத்துக்கள், கலைஞர்களின் கவனத்தைக் கவரும் சக்தி வாய்ந்தனவாக அமைந்து விடவுங் கூடும். ஆகவேதான், 'காரி' லும், கீரிமலைக் கரையிலும் இருவரும் உல்லாசமாகச் சம்பாஷித்துக் கொண்டிருக்கையில் இசைபற்றி வெளியான சில சிந்தனைச்சிதர்களை இங்கு உருவாக்க முயலுகின்றேன்.

### நிகழ்ச்சி நிரல்

இப்போதெல்லாம் இசைக் கச்சேரிகளில் அன்றைய நிகழ்ச்சி நிரல் அச்சிட்டுச் சபையில் விநியோகம செய்வது வழக்கமாகி விட்டது. ஸ்ரீ சடகோபன் இக்கட்டுப் பாட்டுக்குள் அமைந்து நடந்துகொள்வதில்லை. இசைப் பிரவாகத்தில்ஈடுபட்டுப் பாடகர் ஒருவர் கான வெள்ளத்தைப் பொழிந்து கொட்டிக்கொண்டிருக்கையில் அவர் எவ்வித கட்டுப்பாட்டுக்கும் அமைய முடியாதென்பது ஸ்ரீ சடகோபனின் அபிப்பிராயம். சாரீரத்துக்கு இசைய எந்த இராகம் சுகமாகச் சுரந்து வருகின்றதோ அதற்குத் தான் பாடகர் அடிமையாகிக் கொள்ளுகின்றூரென ஸ்ரீசடகோபன் தெரிவித்தார்.

தமிழ்ப்பாடல்களை ஸ்ரீ சடகோபன் இனிமையாகப் பாடுகின்றூர். அவற்றை அனுபவித்துப் பாடுகின்றூர். உணர்ச்சி ததும்பப்பாடுகின்றூர். தமிழ் இசை இயக்கத்தை ஆதரித்தும நிற்கின்றூர். [illegible] தும, "தமிழ் இசை, தமிழ இசை'' என்று சொல்லி அதைத்தான் கௌரவித்துப் பேசுபவர்களைக் கண்டு அவர் ஆச்சரியப்படுகின்றூர். சங்கீதத்தை முறையாகப் பயின்று அதை நாளாந்தம் பல மணி நேரம் சாதகம் செய்த பின்னர், எந்த இசையையும் ஆதரிக்கலாம். அதிற்செம்மையுமுறலாமென அவர் கருதுகின்றூர்.

### பிள்ளைத் தமிழ்

தமிழ்ப்பாடல்களின் கருத்தை நன்கு அறியாதவர்களுக்கு இசைபற்றிப் பேதமே தெரிவதில்லை யென்பதை அவர் பின்வருமாறு விளக்கினூர். "நான் பேராதரிக்கும் என்ற பிள்ளைத் தமிழ்ப்பாடலைப் பாடும்போது சபையில் உள்ள சாதாரண மக்கள் அதை அனுபவிக்கின்றனர். இதற்கிடையில் ஒரு சிறு சம்பவம். [யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காலஞ் சென்ற ஸ்ரீ மாணிக்கத்தியாகராஜர் ஒருமுறை இப்பாடலை நான் பாடுவதைக் கேட்டுக் கண்ணீர் சொரிந்தார். தவிர சபையிலே அதிக தூரத்தில் இருந்த அப்பெரியார் தாம்செய்வது யாதெனத் தெரியாமலே அரக்கி, அரக்கிக் கொண்டு வந்து நான் பாடி முடித்த போது எனக்கருகே வந்து, என்னைக் கட்டி அணைத்தார். இத் தமிழறிஞரின் பிரிவை நான் ஈழகேசரியிற் படித்த போது, செட்டி நாட்டில் நடைபெற்ற இச்சம்பவத்தை எழுதவேண்டுமென நினைத்தேன். பின்னர் சந்தர்ப்பம் இடைக்கவில்லை] இனி, மீண்டும விஷயத்துக்கு வருவோம். பேராதரிக்கும் என்ற பாடலை அனுபவிக்கும் சாதாரண மக்கள் முன்னிலையில் கத்துந்தரங்க மெடுத்தெறிய என்ற பிள்ளைத்தமிழ்ப் பாடலைப் படித்தால அவர்கள் அவ்வளவாக அனுபவிப்பதாயில்லை ஆனல் மாணிக்கத்தியாகராஜர் போன்ற அறிஞர்கள் அதையும் அனுபவிப்பார்கள். ஆகவே, தமிழ் அறிவு நிரம்பியிருந்தாற்ருன் சில தமிழ்ப் பாடல்களையும் அனுபவிகக முடிகின்றது''

'எந்த வேடுகோ''

### இராஜ அரியரத்தினம்

இனி, வேறேர் அம்சத்தைக கவனிப்போம். எந்த வேடுகோ என்ற தெலுங்குக் கீர்த்தனத்தைக் கானரத்தினம் சடகோபன் ஆரம்பிக்க வேண்டியதுதான் தாமதம், உடனே சபையில் உள்ளவர்கள் 'ஆகா அற்புதம்' என்று மெச்சுகிருர்கள். அவருக்கு இஷ்டமானபாடல்என்று சொல்லிப் பெருமை பாராட்டுகிருர்கள். அதை அனுபவிக்கின்றூர்கள். சில கட்டங்களிற், கரகோஷமும் செய்கின்றனர். இத்தனைக்கும் சபையில் உள்ளவர்கள் அனைவருக்கும் 'களிதெலுங்கு' [பாரதியார் சுந்தரத் 'தெலுங்கு என்ருர்] தெரியுமோ என்ருல் தெரியாதென்றே சொலலவேண்டும். இதை எதற்காகக் கூறினேனெனில், இசையானது நாடு, மொழி, என்ற எல்லைக்கு அப்பாற் பட்டதென்பதை விளக்குவதற்காகவேயாகும்.

### வர்ணம்

இனி, இராகத்துக்குரிய சுவரத்தின் எழுத்துக்களான வர்ணத்தை எடுத்துக்கொள்வோம. வர்ணம் விளங்காமல் இருப்பதே நன்று. தெலுங்கர்கள்கூட வர்ணத்திற் பின்னப்பட்டுள்ளவற்றின கருத்தை அறிந்துகொள்ளக் கரிசனை எடுப்பதில்லையாம். ஆகவே, வர்ணம் தமிழாக இருந்தாலென்ன தெலுங்காக இருந்தாலென்ன அதனுல் எவ்வித பாதகமும ஏற்பட்டுவிடமாட்டாதென ஸ்ரீ சடகோபன் கருதுகின்றூர்.

### குரல்.......விரல்

ஸ்ரீ சடகோபன் அவர்கள் வல்லுவெட்டித்துறை— சிதமபர வித்தியாலயத்து அதிபர் ஸ்ரீ ஐயங்கார் அவர்களின் இல்லத்தில் இங் கட்கிழமை (7-3-49) இரவு அன்பர்களுடன் பேசிக் கொண்டிருக்கையில் அவ்லூர்ப் பிரபல அன்பர் ஸ்ரீ சுந்தரலிங்கம் இரு பெண்மணிகளை அழைத்துவந்தார். அவர்கள் இருவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களில் ஒருவருக்கு மிருதங்கம வரும். மற்றவர் பாடுவதுடன் வயலினும் வாசிப்பார். கலை ஆர்வமுள்ள இப் பெண்மணிகள் சங்கீதஇளவரசரைக் கௌரவிக்க வந்தனர். (யாழ்ப்பாணம நகர மண்டபத்தில் நடைபெற்ற சடகோபன் கச்சேரியில் பரமேஸ்வரக் கல்லூரி அதிபர் சு. நடேசபிள்ளை அவர்கள் சடகோபன் கானத்தின் கனிவையும் குளிர்ச்சியையும் பற்றிப் பேசுமபோது அவரைச் சங்கீத இளவரசர் எனவும் குறிப்பிட்டார்.)

அப்பெண்மணிகளின்கச்சேரியைச்சிறிதுநேரம கேட்டபின்னர் ஸ்ரீ சடகோபன் கூறிய புத்திமதி வருமாறு: விரல் இல்லையேற் குரல் என்பார்கள். குரல் நன்குயிராதாயின் விரல் அதாவது ஒருவர் வாய்ப் பாட்டிலே பக்குவநிலை பெற வேண்டும். இல்லாது போனல் வயலின் வாசிப்பதிலே தேர்ச்சி பெறவேண்டும்எதற்கும் தினம் 6 மணி நேரம் சாதகம செய்யவேண்டும். ஆகவே, ஒன்றில் வயலின் வாசிபபதில அனுபவம் பெற வேண்டும். இல்லாதுபோனல் இனிமையாகப் பாடுவதிற் பயிற்சி பெறவேண்டுமென அவர் கூறி அப் பெண்மணிகள் இருவரையும் ஆசீர்வதித்தார்.

* * *

சிலமாதகாலம் பயின்று சங்கீதப் பரீட்சைகளிலே தேறிச் சங்கீதத் துறையை ஒருகை பார்த்துவிட்டோம் என்று சொலலித் தம்மைச் சஙகீத வித்வான்கள் என நினைத்து ஆறுதல் அடையும் சஙகீத விற்பன்னர்கள், இதை ஊன்றிக் கவனிப்பார்களாக. [இது எனது சொந்தம்]

* * *

### சிதம்பர வித்தியாலயம

வல்லுவெட்டித்துறையைப் பற்றி எழுதுமபோது அங்குள்ள சிதமபர வித்தியாலயமும், அதன் அதிபரும், ஆசிரியர்களும அவ்லூர் அன்பர்களும் கண்முன் நிற்கின்றனர். சிதம்பர வித்தியாலயம் ஒரு கலைக்கோயில். அதன் வளர்ச்சி நிதிக்குப் பணஞ் சேகரித்து உதவுவதற்காகவே சடகோபன் கோஷ்டியினர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தனர். இத்துறையில் வித்தியாலயத்து அதிபரின் முயற்சியை எவ்வளவுக்குப் பாராட்டினூலுந் தகும. அவருடன் ஒத்துழைக்கும் பல அன்பர்களின் பெயர்களை அன்று அவர் சபையிற் குறிபபிட்டார் எனக்குப் பெயர்கள் ஞாபகமில்லை. ஆர்வம நிறைநத அவ்லூர் அன்பர்களின் பண உதவியுடன் சிதமபரவித்தியாலயம் சிறப்புற வேண்டுமென்பதே எமது பிரார்த்தனை.

இவ் வித்தியாலயம் சகல வசதிகளும் நிறைந்த கட்டடங்களுடன் விளஙகும்போதெல்லாம், ஸ்ரீ சடகோபன் கோஷ்டியினர் அன்று அமைத்துச்சென்ற இசைக் கோபுரமும வானேங்கி நிற்குமென்பதையும் சொல்லவும் வேண்டுமா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர் உரிமைகள்

## போராடத் தயார்!

**ஆவரங்கால்** சிவன் கோயில் வீதியிலே தமிழ்க் காங்கிரஸின் மாபெருங் கூட்டம் சென்ற 5-3-49 சனிக்கிழமை மாலை ஆறுமணியளவில் நடைபெற்றது. கோப்பாய்த் தொகுதிப் பிரதிநிதி ஸ்ரீ வி. வன்னியசிங்கம் தலைமை வகித்தார். முதல் நாள் திரு. வி.வன்னியசிங்கத்தை முன் தேர்தலில் ஆதரித்தோர் இப்போது எதிராக ஒரு பகிரங்கக் கடிதம் (ஒன்பது கேள்விகள் போட்டு துண்டுப்பிரசுரமாக) வினியோகித்திருந்தனர். ஆகையினாலே ஜனங்கள் கூட்டத்துக்கு திரண்டு வந்தனர்.

திரு. வன்னியசிங்கம் பேசும்போது தமிழ்க் காங்கிரஸ் சார்பாகத் தாங்கள் தேர்தலுக்கு நிற்கும்போது கொடுத்த வாக்குறுதியை வாசித்து விளக்கினார். ஆகையினாலேயே இந்திய மசோதாவை எதிர்த்ததாகவும் கூறினார். மீன்பிடிப்பகுதி மந்திரி பொன்னம்பலம் அவர்கள் இலங்கை இந்திய காங்கிரஸுக்கு எழுதிக்கொடுத்த வாக்குறுதியையும் வாசித்துக்காட்டி விளக்கினார். தாமும் தமது நண்பர்களும் இந்திய மசோதாவை எதிர்த்ததை யாராவது சபையில் எதிர்த்தால் கை உயர்த்துமாறு கேட்டார். அப்போது ஒரேஒரு இளைஞர் மாத்திரம் கை உயர்த்தியதோடு கூட்டத்தைக் குழப்பவும் முயற்சித்தார். சபையில் இருந்தோர் அவரை அப்புறப்படுத்தினர். இந்திய மசோதாவை எதிர்த்தது நியாயமெனச் சபையோர் ஏகமனதாகக் கை உயர்த்தியும் கரகோஷம்செய்தும் தெரிவித்தனர்.

பின்னர் ஸ்ரீ வன்னியசிங்கம் தமக்கு எதிராகச் சில நண்பர்கள் பிரசாரம் செய்வதாகவும், அச்சுவேலிக் குடியேற்றத் திட்டமும் கிலாவளைத் திட்டமும் இந்திய மசோதாவை எதிர்த்தபடியாற் கைவிடப்பட்டதாக ஒரு அரசாங்க உத்தியோகஸ்தர் பிரசாரம் செய்வதாகவும் எடுத்துக்கூறி அதற்குரிய காரணங்களை விளக்கினார். இந்திய மசோதாவை எதிர்த்தபடியால் அத்திட்டம் பின்போடப்பட்டது என்பதை முற்றாக மறுத்தார்.

ஜி. ஜி. பொன்னம்பலத்திலும் பார்க்க வன்னியசிங்கத்துக்கு அரசியல் அனுபவம் இருக்கிறதா எனவும் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு 1921-ம் ஆண்டு தொடக்கம் பணியாற்றிய சேர் ஏ. மகாதேவாவிலும் பார்க்க ஜி. ஜி பொன்னம்பலத்துக்கு அரசியல் அனுபவம் உண்டா எனக் கேட்டார். இப்படியான கூட்டங்களை ஒவ்வொரு கிராமத்திலும் நடாத்தப்போவதாகவும், எந்தக் கொள்கையுடன் தேர்தலுக்குப் புறப்பட்டோமோ அதே கொள்கைக்காகவே தாம் வாதாடப்போவதாகவும் தெரிவித்துக் கடைசியில் ஒரு கதை சொல்லிக் குறிப்பாக ஒரு அரசாங்க அதிகாரியையும் பகிரங்கமாக எச்சரிக்கை செய்து ஸ்ரீ வன்னியசிங்கம் கூறியதாவது. "ஒரு வண்ணானுக்கு ஒரு நாயும் கழுதையும் இருந்தன. கழுதையின் வேலை பொதி சுமப்பது நாயின் வேலை காவல் செய்வது. ஒரு இரவு கள்வன் வந்தான். வண்ணான் நித்திரை. நாய் குலைக்கவில்லை. கழுதை அதிகமாகக் கனைத்தது. வண்ணானது நித்திரை குழம்பியது. உடனே வண்ணான் கோபித்துக் கொண்டுவந்து ஒரு கட்டையாற் கழுதையின் முதுகில் மோதினான். கழுதையின் முதுகெலும்பு முறிந்தது. இதே போல் நாய் போன்ற எங்கள் (பாராளுமன்ற அங்கத்தவர்) கடமைகளில் கழுதைபோன்ற (அரசாங்க) உத்தியோகத்தர்கள் தலையிடக்கூடாது. சபையோராகிய நீங்கள்தான் வண்ணான். உங்களுக்கு உரிய அரசியல் கடமை என்னைப் பொறுத்தது. அரசாங்க அதிகாரிகள் இதிலே தலையிடக் கூடாது. இதை இந்த மேடையிற் பகிரங்கமாக எச்சரிக்கை செய்கின்றேன்" என்று கூறினார்.

அடுத்தபடியாக காங்கேசன்துறைப்பகுதிப் பிரதிநிதி எஸ். ஜே. வி. செல்வநாயகம் தமிழருக்குத் தனி அரசு வேண்டும் எனவும் காஷ்மீர், ஹைதராபாத்தில் பொதுஜனவாக்கு எடுப்பது போல் தமிழர் உள்ள இடங்களிலும் பொதுசனவாக்கு எடுக்கவேண்டும் என்றும், இந்த இலட்சியம் கைகூடுவதற்காக ஐக்கியநாட்டுச் சபைக்குக்கூட விண்ணப்பம் செய்ய முடியும் எனவும் இது தமிழருடைய சுய நிர்ணய உரிமை எனவும் இந்திய மசோதா, தமிழரைத் தனிக்கவைக்கச் செய்த சூழ்ச்சி எனவும் இந்தச் சூழ்ச்சியில் சில தமிழ்ப் பிரதிநிதிகள் அகப்பட்டுவிட்டார்கள் எனவும் கூறினார். தமிழர் தங்கள் உரிமைக்காக எத்தனை தலைமுறை போராடினாலும் பாதகமில்லை எனத் தெரிவித்தார்.

அடுத்தபடியாக மேற்சபை அங்கத்தவர் டொக்டர் ஈ. எம். வி. நாகநாதன் பேசினார். தமிழர் பாஷாவாரியாக மாகாணத்தைப் பிரித்து மாகாணச் சுயாட்சியாகத் தம்மைத் தாமே அரசாளவேண்டும் எனவும் சிங்களருக்கும் தமிழருக்கும் ஒரு மத்திய அரசாங்கம் இருக்கவேண்டும் எனவும் கூறி, தமிழர் தங்கள் சுதந்திர ஜோதியைக் காண்பதற்காக மகாத்மா காட்டியவழி சத்தியாக்கிரகம் செய்து தங்கள் உரிமையைப் பெறவேண்டும் என வற்புறுத்தினார். அடுத்தபடியாக ஆசிரியர் சிவகுரு பேசும்போது மந்திரி பொன்னம்பலம் சுயநலத்தினால் போராட்டத்தினின்றும் வெற்றிகரமாகப் பின்வாங்கிவிட்டார் எனக் குறிப்பிட்டார்.

கூட்டம் முடிந்தபின்னர் சபையோர் பொன்னம்பலம் அடுத்த தேர்தலுக்கு வேறு வழியைக் கையாளக் கூடுமெனவும் ஒருவேளை இந்தப்போட் இராசரத்தினம், சேர். மகாதேவா, ஸ்ரீ நடேசபிள்ளை ஆதியோரைக் கண்டு பேசி நானும் யூ. என். பி. நீங்களும் யூ. என் பி. இனிமேல் ஒற்றுமை தானே என்று கூறி அவர்களை அணுகக் கூடும் எனவும் பேசிக்கொண்டனர்.

—நமது நிருபர்

### விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 2468/P இலக்க வழக்கில் 1949-ம் ஆண்டு பங்குனி மாதம் 3-ம் தேதியைக் கொண்ட கோட்டுக்கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனம் 1949-ம் ஆண்டு சித்திரை மாதம் 9-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணிவரையில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

#### விபரம்

கரவெட்டி வடக்கு
**சீனியர் நடராசா** வழக்காளி
கரவெட்டி வடக்கு

1. **வயித்திலிங்கம் கந்தவனம்** காலஞ்சென்ற **வயித்திலிங்கம் பெண் சிதம்பரத்தின்** ஆதனத்துக்குகாரியஸ்தன் என்ற வகையில்
2. மேற்படியூர் **வேலுப்பிள்ளை செல்லத்துரை.**
3. மேற்படியூர் **செல்லத்துரை இரத்தினசிங்கம்**
4. மேற்படியூர் **செல்லத்துரை கதிரவேலு** 3ம் 4-ம் எதிராளிகள் சிறுபிள்ளைகள். அவர்களின் பராபரிப்புக்காரன் மேற்படியூர் **வேலுப்பிள்ளை நடராசா** மூலமாய். எதிராளிகள்

#### ஆதனம்

கரவெட்டி வதிரிக் குறிஞ்சியிறை கிளிசிட்டி கிலப்பரப்பு $22\frac{1}{4}$ இதில் கிந்தமான கிலப்பரப்பு 3 குளி 7 $\frac{5}{32}$ எல்லை கிழக்கு, ரோட்டு. வடக்கு சின்னையா பெண் தங்கத்துக்குடைய ஆதனம். மேற்கு நாகப்பர் நமசிவாயத்துக்குடைய ஆதனம். தெற்கு சின்னத்தம்பி செல்லையாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லைக் குட்பட்டவைகளில் சொரியலாய் அரைவாசி.

S. C. Kanagasabai
கொம்மிஷனர்

புலோலி கிழக்கு
5-3-1949 [3637]

### ஸ்ரீ இராமக் கிருஷ்ணர் ஜெயந்தி

களுதாவளை சைவப்பாடசாலையில் மேற்படி ஜெயந்தி பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. எஸ்.கண்ணமுத்து, அவர்கள் தலைமையிற் கொண்டாடப்பட்டது.

### நவாலி கிராம முன்னேற்ற சங்கம்

மேற்படி சங்கத்தின் ஆதரவில் ஓர் பகிரங்கக் கூட்டம் 5-3-49 சனிக்கிழமை பிற்பகல் தலைவர் வ, மகேசன் அவர்கள் தலைமையில் கூடிற்று. கனம் டீ. பீ. இளையதம்பி திரு. ஏ. எம் சாமுவேல் திரு. க, குழந்தைவேலு (காரியதரிசி) ஆதியோர் சொற்பொழிவுநிகழ்த்தினர்.


## யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி

**1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.**

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம்
ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை:**
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்

**தினசரிப் பற்று வரவு:**
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:**
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்

S. கனகசபை
மனேஜர்

[3620]


### மறவன்புலோ சமூகசேவாசங்க வாசிகசாலை

மறவன்புலோ சமூக சேவா சங்கஆதரவில் 5-3-49 சனிக்கிழமை காலை ஷ்டி வாசிகசாலைத் திறப்புவிழா வைபவம் தலைவர் ஸ்ரீ. மு. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமையில் ஆரம்பமாயது தலைவர் தமது முன்னுரையின் பின்னர். மறவன்புலோ பழைய கிராமாதிகாரி ஸ்ரீ சே. அருளம்பலம் அவர்களை வாசிகசாலையைத் திறந்துவைக்கும்படிவேண்டினர். திரு சே. அருளம்பலம் அவர்கள் குத்துவிளக்கை ஏற்றிவைத்து வாசிகசாலையைத் திறந்துவைத்தார்: பின்னர் ஸ்ரீமான்கள் மா. பொன்னம்பலம் ஆ. கந்தையா, க. கனகசபை ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

ஸ்ரீமான்கள் .கோ. சண்முகம், சி. கந்தசாமி என்பவர்களின் குறிப்புரைக்குப்பின் காரியதரிசி ஸ்ரீ நா. பொன்னம்பலம் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவேறியது. —கடிதம்.

### பெற்றோர் தினவிழா

மட்டக்களப்பு, கிண்ணையடி, றோ. க. பாடசாலைப் பெற்றோர் தினவிழா, 3-3-49 வியாழக்கிழமை பிற்பகல் பாடசாலை மண்டபத்தில் பகுதி முகாமைக்காரர். வணசுவாமி ஜி. ஈ. எல். வம்பேக் அவர்கள் தலைமையிற் கொண்டாடப்பட்டது.

### முள்ளியவளை வாசிகசாலை

மேற்படி வாசிகசாலை முள்ளியவளைச் சைவப்பாடசாலைக்கு அருகாமையில் திரு. ச. கணபதிப்பிள்ளை அவர்களால் வழங்கப்பட்ட நிலப்பரப்பில் கிராம முன்னேற்றச் சங்கத்தாரின் பிரயத்தனத்தால் அமைக்கப்பட்டு 26-2-49ல் வவுனியா அரசாகஉப அதிபர் திரு. ந. மாணிக்க இடைக்காடர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

### மகா சங்காபிஷேகம்

20-3-49 ஞாயிற்றுக்கிழமை பகல் தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயிலில் மகா சங்காபிஷேகமும், இரவு விசேஷ உற்சவமும் நடைபெறும். —கடிதம்

### ORDER NISI

IN THE DISTRICT COURT
OF JAFFNA

*Testamentary Jurisdiction* } No. 1001

In the matter of the Estate of the late **Vairamuttu Veluppillai** of Chunnakam
*Deceased*

**Theivanaippillai** widow of **Vairamuttu Veluppillai**
*Petitioner*

*Vs.*

1. **Veluppillai Kathiravelu**
2. **Veluppillai Tharumalingam** *alias* **Tharumarajah**
3. **Veluppillai Muttulingam**
4. **Parameswari** daughter of **Veluppillai**
5. **Veluppillai Balakrishnan** all of Chunnakam
6. **Vairamuttu Thamotherampillai**

*Respondents*

This matter coming on for disposal before R. R. Selvadurai, Esqr. District Judge in the presence of Mr. T. Kumaraswamy, Proctor on the part of the petitioner on the 11th day of February 1949 and the affidavit of the petitioner having been read;

It is ordered that the 6th respondent abovenamed be appointed Guardian-ad-litem of the 1st to 5th respondents for the purpose of representing i them in this case. And the pet tioner be declared entitled to Letters of Administration to the Estate of the deceased abovenamed unless the respondents or any other persons shall appear before this Court on or before the 11th day of March 1949 and show sufficient cause to the contrary. It is further ordered that the 6th respondent do produce the said minors before this Court on the said date.

This 11th day of February 1949.
(Sgd.) ***R. R. Selvadurai***
*District Judge.*

[3631—ii]

### ORDER NISI

IN THE DISTRICT COURT
OF JAFFNA

*Testamentary Jurisdiction* } No. 1005

In the matter of the Estate of the late Suppiramaniam Ponnudurai of Chunnakam
*Deceased*

**Paruvathapathinipillai** widow of **Ponnudurai**
*Petitioner*

*Vs.*

1. **Ratnamani** daughter of **Ponnudurai**
2. **Ponnudurai Rajaratnam**
3. **Ponnudurai Nagaratnam**
4. **Ratneswari** daughter of **Ponnudurai**
5. **T. S. Mudaliar** all of Chunnakam

*Respondents*

This matter coming on for disposal before R. R. Selvadurai Esquire, District Judge in the presence of Mr. T. Kumaraswamy, Proctor on the part of the Petitioner on the 18th day of February 1949 and the affidavit of the petitioner having been read:

It is ordered that the 5th respondent abovenamed be appointed Guardian-ad-titem of the 3rd and 4th respondents for the purpose of representing them in this case. And the petitioner be declared entitled to Letters of Administration to the Estate of the deceased abovenamed unless the respondents or any other persons shall appear before this Court on or before the 22nd day of March 1949 and show sufficient cause to the contrary It is further ordered that the 5th respondent do produce the said minors before this Court on the said date.

This 18th day of February 1949
(Sgd.) **R.R. Selvadurai**
District Judge

[3630—ii]

### விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 3056/P இலக்கப் பிரிவிடல் வழக்கில் 1949ம் ஆண்டு மாசி மாதம் 18ம்திகதியைக்கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனம் 1949ம் ஆண்டு சித்திரை மாதம் 11ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4-30 மணிவரையில் அந்தக் காணிக்குள் நின்று முதலாவதாக மதிப்பின்படி காணிப் பங்காளருக்குள்ளும் பங்காளர் கேள்விக்காரராக இல்லாவிட்டால் மறுபேர்களுக்கிடையிலும் அதியுயர்ந்த கேள்விக்காரனுக்குப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

#### விபரம்

புலோலி தெற்கு **கணபதியார் சின்னையா** வழக்காளி
புலோலி தெற்கு

1. **மாப்பாணர் முருகேசு**
2. **பெண் ஆழ்வாத்தை**
3. **சின்னத்தம்பியார் கணபதிப்பிள்ளை மறுநாமம் முருகேசு கணபதிப்பிள்ளை**
4. **சின்னத்தம்பியார் சுப்பிரமணியம்** எதிராளிகள்

#### ஆதனம்

புலோலி கிழக்கு சிங்கபாகு தேவன் குறிச்சியிறை ஒருபனைகிறை சீமா நிலப்பரப்பு $3\frac{1}{4}$ ஷெ வீடு $\frac{1}{2}$. இதில் கிந்தமான கிழக்கரைவாசிக்கு நிலப்பரப்பு 2. குளி $4\frac{30}{32}$. எல்லை கிழக்கும் வடக்கும் தெற்கும் ஒழுங்கை. மேற்கு புலோலி தெற்கு கந்தையா மைம் பெண் தெய்வானைக்குடைய A என்ற துண்டு. இது 1948ம் ஆண்டு ஆடி மாதம் 4ம் திகதி உலாந்தா, T. சுப்பிரமணியத்தால் 1176ம் இலக்கத்தில் வித்தாரிக்கப்பட்டு வழக்கில் அணைபட்டிருக்கும் படத்தில் B என்ற துண்டு. இது முழுவதும் பெறுமதி ரூபா 900/–

S. C. Kanagasabai
கொம்மிஷனர்

புலோலி கிழக்கு
26-2-1949 [3636]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




**மருமக்களே!**

**வணக்கம்.** சென்றவாரம் எழுதிய நாகரீக வளர்ச்சியை வாசித்தீர்களா? இவ்வாரம் உங்களுக்கு, நாகரீகம் வளர்ந்த எகிப்தைப்பற்றி எழுதுகிறேன். இதையும் வாசியுங்கள்.

ஆதிகாலத்திலே நாகரீகம் **ஆறுகளின்** பள்ளத்தாக்குகளில் தான் ஆரம்பமானது. இதற்கு மூன்று காரணங்கள் உள. ஒன்று நீர்ப்பாய்ச்சக் கூடியனவாயிருப்பதால் இவ்விடங்களில் தானியங்கள் நன்ருய் வளர்ந்தன. இரண்டாவது, நதிக்கரை ஓரங்களிற் சனங்கள் வசித்தும் வந்தார்கள். மூன்ருவதாக, கரைகளில் உள்ள மண்ணுற் செங்கட்டிகளாக்கி, மண வீடுகள் சுலபமாகக் கட்டத்தக்கனவாயிருந்தன.

**எகிப்தியரின்** நாகரீகம் 6000 வருஷங்களுக்கு முன்னரே ஆரம்பமானது. பழைய எகிப்து தேசத்தில், அரசன், குருமார், இடையர், வேளாளர், வணிகர், எழுத்தாளர், தச்சர், சிற்பிகள் எனப் பலவகைத் தொழில் செய்பவர்கள் இருந்தார்கள். இவர்கள் மிகவும் சமயப்பற்றுள்ளவர்கள். பல தெய்வங்களையும் **வணங்கினர்.** சூரியனை **இரு** என்று அழைத்தார்கள். **ஓசிரஸ்** என்னும் தேவதை **நைல்** நதிக் கடவுளென்றும் இறந்தவர்களுக்குத் தீர்ப்புச் சொல்பவரென்றும் நினைத்தார்கள். துஷ்ட தேவதையை **ஸெட்** என அழைத்தார்கள்.

இறப்புக்குப் பின்னரும் ஒரு ஜீவியம் உண்டு என்று நம்பினுர்கள். ஆதலாற் பிரேதத்தைப் புதைக்கும்பொழுது கத்தி, தண்ணீர்ப்பாத்திரம், கதிரை முதலிய பொருட்களையும் வைத்துப் புதைத்தனர். பிரேதம் பழுதடையாமலிருப்பதற்குத் தகுந்த வாசனைத் திரவியங்களைப் பூசி உடம்பைத் துணியாற் போர்த்துப் புதைப்பார்கள். இவைகளை **மம்மீஸ்** (Mummies) என்று ஆங்கிலத்திற் சொல்வார்கள்.

கல்வியிற் பிரிய முடையவர்கள் ஏதாவது பிழைகளைச் செய்தால், எகிப்திய தாய்மார் அவர்களுக்குத் தண்டனையாக ஆமணக்கு எண்ணெயைப் பருக்குவார்கள்.

எகிப்தியரே முதன் முதலாக எழுத்தை அறிந்தார்கள். ஆதியிற் சித்திர எழுத்துக்களை உபயோகித்தனர். பின்பு **இலிபிகளை** ஆக்கினர். வீடு என்பதைக் குறிக்க வேண்டுமென்ருல் ஒரு வீட்டின் படத்தை வரைந்து காட்டுவதே சித்திர எழுத்து முறையாகும். **ஹைரோ கிளிபிக்ஸ்** அல்லது குருமார் எழுத்து என்றும் அழைத்து வந்தனர்.

**பப்பிரஸ்** என்று ஒருவகைப் புல்லிலிருந்து கடதாசி செய்தனர். சில விஷயங்களைத் தமது கட்டிடங்களிலும் எழுதிவைத்தனர். இதனுல் இவர்களின் சரித்திரத்தை அறியக்கிடக்கின்றது.

பிரபுக்கள், நீளக்குறைந்த சட்டைகளும், ஆபரணமிழைத்த கச்சையையும் அணிந்து வந்தனர். சீமாட்டிகள் தோளிலிருந்து கால்வரையும் நீண்ட ஆடைகளையும் அணிந்தார்கள். இவர்களுக்குச் சங்கீதம், நடனம் முதலிய நுண்கலைகளிலும் விருப்பம் உண்டு. சிலர் யாழ் முதலிய வாத்தியக் கருவிகளையும் வாசித்து வந்தார்கள். திராட்சரசம் பிழியும் படங்கள் சில கட்டடங்களில் வரைந்து இருக்கிறபடியால் மதுபானம் அருந்தியிருத்தல் வேண்டும் என ஊகிக்கக்கூடியதாயிருக்கிறது.

இவர்களே கடிகாரங்களை முதன் முதற் செய்தனர். வருஷத்திலே 365 நாட்கள் என்றும் 12 மாதங்கள் என்றும் கணக்கிட்டார்கள். வான சாஸ்திரப் பயிற்சியும் இவர்களுக்கு உண்டு. வைத்தியமுறைகளையும் நன்கறிந்தவர்கள்.

செம்பாலும், வெண்கலத்திஞலும் செய்யப்பட்ட ஆயுதங்களையும் உபயோகித்தார்கள். எகிப்திய மன்னர்களின் அரண்மனைகள் மிகவும் பெரியவைகள். அரசர்களின் பிரேதங்களைப் புதைத்து அதற்கு மேலே சமாதிகள் கட்டுவித்தனர். இவைகள் **பிறமிட்** என்று அழைக்கப்படுகின்றன. இப்பிறமிட்களில் **சீயோப்ஸ்** அரசனினதே மிகவும் பேர் போனது.

இவர்களுடைய அரசரைப் **பேரு** (Pharaoh) என்று அழைத்தனர். கி. மு. 700 வருஷங்கள் வரையும் சுதந்திரமடைந்தவர்களாயிருந்தார்கள். பின்னர் **அசீரியர்**வசமும், அதற்குப்பின்னர், **உரோமர்** ஆட்சியின் கீழும் கட்டுப்பட்டன.

மருமக்களே அடுத்தவாரம் **பபிலோனைப்**பற்றி எழுதுவேன். இந்தவாரம் திரு. டி. எஸ். சேனநாயகாவைப்பற்றி ஒரு வியாசம் எழுதுவதாக உங்களுக்கு அறிவித்திருந்தேனல்லவா? இவ்வாரம் மருமக்களின் கட்டுரைத் துணுக்குகளைப் பிரசுரிக்கவேண்டியிருப்பதால், எனது கட்டுரையை அடுத்தவாரத்திற்குப் பின்போட்டிருக்கிறேன்.

வணக்கம்,

கேசரிமாமா

**பிறந்ததின வாழ்த்துகள்**

**( 13-3-49 — 19-3-49 )**

**மே.13. இ. சற்குணம்; மே.88. சி. நல்லையா; மே119. க. சுந்தரலிங்கம்; மே.120. இ. பொன்னையா; மே.152. த. அமராவதி; கீ.225. த. சுந்தராணியம்; மே.242. ஆ. சுப்பிரமணியம்; கீ.246. வ. நீத்தம்மா.**

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வார்களாக.

**மருமக்களின் கட்டுரைத் துணுக்குகள்**

## டி. எஸ். சேனநாயகா

...இதற்கு எதிராகப் பலகட்சிகள் உண்டு. அதில் ஒன்று மீன்பிடி கைத்தொழில் மந்திரி திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்.

...இவர் ஆங்கில அரசாட்சியாரிடம் குடியேற்று நாட்டுச் சுதந்திரமும் பெற்றுக்கொண்டார். சுதந்திரத்திற்கு ஆரும் ஜோர்ஜ் மன்னரினுடைய தமையனும் அவருடைய பாரியாரும் இலங்கைக்கு விஜயம் செய்தார்கள்....

* * *

....இவர் ஒருசமரசவாதி. சிங்கள வகுப்பைச் சேர்ந்தவராயினும் இவரிடத்தில் வகுப்புவாதக் கொள்கைகள் அறவே இடையா....

* * *

...நமது பிரதமர்மீது அரசாங்கசபை எதிர்க்கட்சியினர் எந்நேரமும் நெருப்பாய் நிற்பார்கள்.

D. S. சேனநாயகா என்ருல் "டொமினியன் ஸ்டேட்டஸ்(மகன்)சேனநாயகா என்று கூறுகின்றனர்....

...சேனநாயகா குடும்பமே இலங்கையை ஆளுகின்றது என்று பலர் கூறுகின்றனர்.

...இலங்கைக் காந்திதான் பிரதமர் சேனநாயகா அவர்கள். பிரதமரது மீசை எமக்குப் பார்க்கப் பயமாய் இருந்தாலும், அவருக்குக் கெம்பீரமான இராச தோற்றத்தைக் கொடுக்கின்றது....

* * *

...இவர் ஏழாம் வகுப்புப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே வாலிபப்பாரயம் அடைந்தார்....

....சிலநாட்களுக்குப் பின் இவர் ஒரு மாந்தோட்டத்தில் உள்ள காவற்காரன் பதவியை ஏற்ருர்.....

...இவரை "அம்ப பண்டா" என அழைக்கலானுர்கள்.....

* * *

...இவர் எமது மாதாவால் மூத்தகுமாரனுக நியமிக்கப்பட்டார்...

...ஆங்கிலேயருடன் ஒற்றுமையாக வாழுவார்கள் என்று சத்தியங் கூறினர். இத்தாலிய வீரனுன கரிபால்டின் பெருமை சேனநாயகாவுக்கு உரியதெனில் மிகையாகாது.....

....இவருடைய மதம் புத்தமதமேயானுலும், இவர் வணங்குகின்ற மதம் யாது என்று நாம் கூறமுடியாது....

* * *

....இவர் பிறப்பு வளர்ப்பைப்பற்றிநாம் அறியததேவையில்லை.

அரசாங்க சபையில் இவர் கொண்டுவந்த இந்தியர் மசோதாவே இவரிடமுள்ள நாட்டுப் பற்றைப் பளிங்குபோற் காட்டுகின்றது.

அரசியலிலும் இவர் நரியாகவும் காகமாகவும் நாவிதனுகவும் இருக்கின்ருர்.....

## தெரிந்ததா?

1. அறிவைக் குறிக்க வழங்கும் பட்சியெது?
2. நீராவியின் சக்தியைக் கண்டு பிடித்தவர் யார்?
3. கலிங்கத்துப் பரணி செய்த புலவரின் பெயர் யாது?
4. நங்கு எந்தக்காலத்திலுண்டு?
5. பாரசீகரின் தெய்வம் யாது?
6. யாழ்ப்பாணத்தில் வெற்

(விடை 12-ம் பக்கம் பார்க்க)

# ஒட்டகம் உட்கார்ந்தது!

**வீரம் பேசேல் என்பதை மருமக்களுக்கு விளங்கச் செய்வதற்காக ஸ்ரீ எஸ். ஆர். அனந்த நாராயணன் ஒட்டகத்தை உட்காரவைத்து ஒருகதை எழுதியுள்ளார். வாசியுங்கள்.**

ஒரு கிராமத்தில் இரண்டு வியாபாரிகள் இருந்தனர். ஒருவன் வெற்றிலை வியாபாரஞ் செய்து, ஊராரின் உதடுகளுக்குச் சிவப்புச் சாயந் தீட்டியும், மற்றவன் நானுவிதமான வர்ணங்கள் கொண்ட வளையல்களை அவ்வூரிலுள்ள இளஞ்செல்விகளின் கைகளில் அடுக்கி, அவர்களை மகிழ்வித்தும் வந்தான்.

இந்த வியாபாரங்களிற் கிடைத்த சிறிய ஊதியங்களைக்கொண்டு அவர்கள் தத்தம் குடும்ப வாழ்க்கையை நடத்திவந்தனர்.

அவர்களது ஊரிலிருந்து பத்து மைல் தூரத்துக்கப்பால் உள்ள ஒரு கிராமத்தில் வருஷந்தோறும் ஒரு திருவிழா நடைபெறுவது வழக்கம். நெடுந்தூரத்திலுள்ள ஊர்களிலிருந்து, வியாபாரிகள், அத் திருவிழாவிலே தங்களது சாமான்களை விற்பதற்குச் செல்வார்கள்.

வெற்றிலைக்காரன், வளையற்காரனை நோக்கி "நமது சரக்குகளை யெடுத்துக்கொண்டு நாம் இந்த வருஷம் திருவிழாவுக்குச் செல்வோம். கொஞ்சம் லாபமும் கிடைக்கும்; கடையில் உட்கார்ந்திருந்தவண்ணம் வேடிக்கைகளையும் பார்த்துவரலாம்," என்ருன். அதற்கு வளையற்காரன் சம்மதிக்கவே, இருவரும் திருவிழாவுக்குச் செல்வதாகத் தீர்மானித்து ஒரு ஒட்டகத்தை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு, அதன் ஒரு புறத்தில் வெற்றிலைக்காரன் தனது வெற்றிலைக் கட்டுகளையும் தனக்கு வேண்டிய வேறு வஸ்துக்களையும், மறுபுறத்தில் வளையற்காரன் பலநிறங்கள் கொண்ட வளையல்கள் நிறைந்த தனது கூடைகளையும் ஏற்றினுர்கள்.

ஒட்டகம் முன்செலல, இருவரும் அதன்பின் நடந்து சென்றனர்.

வழிநடந்து செல்லுகையில், தனது நீண்ட கழுத்தை எட்டின மட்டும் நீட்டி வழியிலுள்ள மரங்களிலிருந்து இலைகளைப் பறித்துத் தின்னுவது ஒட்டகத்தின் இயல்பு. இதை, யார் வேண்டுமானுலும் கவனித்து அறிந்துகொள்ளலாம்.

பச்சைப் பசேலென்ற இளம் வெற்றிலைக் கட்டுகள் தன்மேல் ஏற்றப்பட்டிருந்ததை யறிந்தபொழுது, ஒட்டகத்தின் வாயில் நீர் சுரந்தது. சமயம் வாய்த்த பொழுதெல்லாம் அதுபின்புறமாகத்தனது கழுத்தைத்திருப்பிக்கொண்டு, தனது வாய்கொண்டளவு வெற்றிலையைத் தின்று மகிழ்ந்தது. இதைக் கண்டபொழுது வளையற்காரன் சிரித்துக்கொண்டு மற்றவனை நோக்கி, 'இதோ பார்த்தாயா உனக்கு என்ன லாபம் கிடைக்கும்? சந்தைக்குப் போவதற்குள்ளாக இந்த ஒட்டகம் உனது வெற்றிலையையெல்லாந் தின்று தீர்த்துவிடுமே!" என்ருன்.

பாவம்! வெற்றிலைக்காரன் என்ன செய்வான்! "நல்லது தம்பி, இந்த ஒட்டகம் எந்தப் பாகம் சரிந்து உட்காருகின்றது என்பதையும் பார்ப்போம்" என்ருன்.

வளையற்காரன், "நீ என்ன சொல்லுகின்ருய்? எனக்கு விளங்கவில்லையே" என்ருன்.

வெற்றிலைக்காரன், "நாம் சந்தைக்குப்போய்ச் சேர்ந்தபின் அதெல்லாம் விளங்கும்" என்றுமாத்திரம் சொன்னுன்.

வழி தொலையவில்லை.

அவர்கள் முன்சென்று வருகையில், ஒட்டகமானது திரும்பவும் இரண்டுமுறை வெற்றிலைக் கட்டுகளை வாய்கொண்டமட்டும் கடித்துத் தனது பெருவயிற்றை நிறைத்துக்கொண்டது. அதைக்கண்டு வெற்றிலைக்காரன் வேறு ஒன்றுஞ் செய்ய இயலாமல், "ஐயோ, தெய்வமே!" என்று பின்னும் ஒருமுறை அடிவயிற்றிலிருந்து பெருமூச்சு விட்டான்.

கடைசியாக அவர்கள் சந்தையை வந்து அடைந்தனர்.

ஒட்டகக்காரன் ஒட்டகத்தை நோக்கி, உட்காரும்படி அதற்கு ஜாடை செய்தான். அப்போதும் வெற்றிலையானது ஒட்டகத்துக்குக் கட்புலனுகியே வந்தது. அதிலிருந்து பின்னும் ஒருமுறை தின்னவேண்டும் எனற ஆவலுடன் அது தனது நீண்ட கழுத்தை எட்டும்மட்டும் நீட்டியது. அப்போது அது தனது பின்புறமாகச் சரிய வேண்டியதாயிற்று. அதனுல் அப்புறமிருந்த வளையல்களெல்லாம் ஒரேயடியாய் நொருங்கிப் பொடிப்பொடியாகி விட்டன!

அப்போது வெற்றிலைக்காரன், "தம்பி, இந்த ஒட்டகம் எந்தப்புறம் சரிந்து உட்காருகின்றது என்று பார்ப்போம், என நான் முன்னமே சொல்லவில்லையா? உனக்கு இப்போது என்ன லாபம் கிடைக்கப்போகின்றது?" என்ருன்.

## மருமக்கள்

மே.261. பே. ஹாக்காஸ் பறுணுந்து, பரி அந்துறாஸ் கல்லூரி புத்தளம்; மே.262. முருகப்பிள்ளை அரியரத்தினம், குடத்தனை, கரவெட்டி.

## மாமா பதில்

**அ. ஜோ. ஜெயராஜா,** மே 245: உமது கவிதை கிடைத்தது. ஆனுல் பிரசுரத்திற்கேற்றதாயில்லை

**ஹ. பறுணுந்து,** மே.261: உம்மை என மருமகனுக்கியிருக்கிறேன். உமது கட்டுரை கிடைத்தது.

**மு. அரியரத்தினம்,** மே.262: உம்மையும் எனது மருமகனுக்கியிருக்கிறேன்.

**இ. பேரின்பநாயகம்,** மே 222: நீர் கூறியபடி, மருமக்களின் படங்கள் பிரசுரிப்பதற்குத் தற்பொழுது வசதியில்லை. ஆனுல் படங்களை எனக்கு அனுப்பிவைத்தால், வசதியேற்படும் பொழுதெல்லாம் பிரசுரிக்கலாமல்லவா? எதைப்பற்றி வேண்டுமென்ருலும் எழுதலாம். உமது கட்டுரை கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# சடகோபன் கான வெள்ளம்

**சென்ற 5-ந் திகதி யன்றிரவு 7-40க்கு வல்வெட்டித்துறை சிதம்பர வித்தியாலய மண்டபத்தில் திரு. எஸ். யூ. சோமசேகரம் அவர்கள் தலைமையில் கானரத்தின வி. வி. சடகோபனின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.**

இவருக்குப் பக்கவாத்தியமாக, திரு. **வி. சேதுராமையா** வயலினும் திரு. **மதுரை கிருஷ்ணன்** மிருதங்கமும், திரு. **வைத்தியநாதன்** கடமுமாக அமைந்தார்கள். அன்றைய நிகழ்ச்சியைக் கானரத்தினம் **கானடா வர்ணத்துடன்** ஆரம்பித்து **பரசு** ராகப்பாட்டாகிய **கலாவாணி என்னைக் கடைக்கண் பார்த்தருள்** என்றதைப் பாடியது ஆரம்பத்திற்கு மிகவும் பொருத்தமாயிருந்தது.

இரண்டாவதாக, **கல்யாணி** இராகம்பாடி **உன்னை எனக்கு காட்டையா** என்ற உருப்படியைச் **சாப்பு** தாளத்திற் பாடினர். கல்யாணி ராகத்தை வயலினில் வாசித்தபோது, சேதுராமையா அவர்கள் கையாண்ட சஞ்சாரங்களும் உயர்ந்த **பா**வமும் போற்றத் தக்கன. ஸ்ருதி சுத்தமாகக் கமகம் கொடுத்து அழகாக வாசித்தார். இந்த உருப்படி சோபிக்கவில்லை. காரணம் என்னவென்றால் இதுவரையிலும் கச்சேரி களை கட்டவில்லை யென்பதே. இதோடு முன்னால் இருந்தவர்கள் பேசிக் கொண்டிருந்த இரைச்சலும், கச்சேரி நிர்வாகஸ்தர்கள் இடையில் வந்தவர்களுக்கு காற்காலிகள் முதலானவையெடுத்து வந்து ஆசன வசதி செய்து கொடுத்ததால் ஏற்பட்ட நடமாட்டமும் ஓரளவுக்குத் தடையாகவிருந்தன. **சரஸ்வதி மனோஹரியில் எந்த வேடு கோ** என்ற உருப்படியைப் பாடும்போது நல்ல கச்சிதம் இருந்தது. சாரீரம் சிறந்த சாதகபலத்தால் எந்த இழுப்புக்கும் வளைந்து கொடுத்தது. இங்கு மிருதங்க வாசிப்புத்தான் ரஸிகர்களை பிரமாதமாக ஆர்வப்படுத்தியது. தொடர்ந்து **தோடி அடாணா, வசந்தா** முதலிய ராகங்களில உருப்படிகளைப் பாடியபின் **ஆனந்த பைரவி** இராகம்பாடித **தோடுடைய செவியன்** என்ற தேவாரத்தைப் பாடியதிலும் பார்க்க வேறொரு உருப்படியைப் பாடிவிட்டு மேற்குறித்த தேவாரத்தை அதற்குரிய நாட்டை இராகத்திற் பாடியிருந்தால் நன்றாக அமைந்திருக்குமென்பது சிலருடைய அபிப்பிராயம்.

**காம்போதி** இராக ஆலாபனை நன்றாயிருந்தது. இராகத்தை மிகவும் விமரிசையாகக் கையாண்டார். இது விசேஷ கற்பனைகளுடன் பொலிந்தது. இதை இவ்வாறாக ஆரம்பித்த உற்சாகத்தில் ஏதோ விபரமாகப்பாடிப் பல்லவி பாடுவார்போலத் தோன்றிற்று! உண்மையைக் கூறப்போனால் காம்போதி இராகம் பாடும் போதுதான் மேளமும் கட்டியது. ஆனால் **வாரமையடி வாரமையென** என்ற விருத்தத்தை ஆரம்பித்துத் தர்பாரில் முடித்து **யோசனு கமலா லோசனு** என்ற உருப்படியைப் பாடினர்.

குந்தலவராளி இராகத்திற் பாடிய **மாலைமணிவண்ணா**, வியவகார ஞானம் படைத்தவராக்கியது கானரத்தினத்தை.

**எதுகுலகாம்போதி** இராகம் பாடும்போது தைவதத்தில் நின்று சில நிமிஷங்கள் பாடியிருந்தால் நன்றாயிருக்குமென்று நினைக்கிறேன். வயலின் வாசித்த சேதுராமையா வெகு அழகாக இந்த இடத்திற்குச் சில சங்கதிகளை வாசித்துக்காட்டினர். அனாயாசமாகப் பல அபூர்வ பிடிகளைப் பிடித்துக்காட்டி நல்ல நிதானம் தோன்ற எதுகுலகாம்போதியை வாசித்தார். இதே இராகத்திற் கானரத்தினம் **யாரென்று ராகவனை என்ணினீர் அம்மா** என்ற உருப்படியைப் பாடினர்.

காதகிருந்த மிருதங்க ஆவர்த்தனம் தொடங்கிற்று. தனி ஆவர்த்தனம். சதுஸ்ரசாதி திரிபுடை தாளத்தில் இரண்டு களைச்சவுக்கத்தில் அரையிடத்திற்குச் சுரம் பாடிவிட்டபடியால் அதே இடத்திற்கு வாசித்துவந்து ஆவர்த்தனம் குறைக்குப்போது சமத்திற்குக் குறைப்பது........?

பொதுவாக மிருதங்க வாசிப்பு நன்றாயிருந்தது. கடம் வாசித்தவருக்குப் போதிய அனுபவம் இருக்கிறதாக அவர் வாசிப்பிற் காணப்படவில்லை. இருந்தும் முன்னணிக்கு வரக்கூடிய அம்சங்கள் நிறையப் பெற்றிருந்தன.

**இந்தோளத்திற்** பாடிய **சிந்தயாமி ஜெகதம்பா** என்ற உருப்படி வெகு நன்றாக அமைந்திருந்தது. இழுத்துப்பறித்துக் கையாளும் பாணிக்கு மாறாக, வேகமும் விறுவிறுப்பும் கூடியதாயிருந்தது.

வித்வான்கள் பல்லவி பாடுவது தமது இராகஞானத்தையும், லயஞானத்தையும், சுரஞானத்தையும் இன்னும் சில கிரமங்களையும் ஒரே நேரத்தில் வந்திருக்கும் ரஸிகர்களுக்குக் காட்டுவதற்காகத் தான் என்பது எனது அபிப்பிராயம். இது சரியோ, பிழையோ என்பதை வாசகர்கள் தான் நிர்ணயிக்கவேண்டும். ஆனால் இவற்றையெல்லாம் உருப்படிகள் பாடும்போதே தெளிவாகக் காண்பித்துவிடலாம். இருந்தாலும் தனியாகப் பல்லவி (இராகம், தானம். பல்லவி) பாடுவது வழக்கத்தில் இருந்துவந்தது. இருந்தும் வருகிறது: இதில் உருப்படிகளிற் செய்ய இடங்கொடாத சில விஷயங்களைச் சாதிக்கக்கூடும்.

கானரத்தினம் **சங்கராபரண** இராகம் பாடத்தொடங்கிய போதுதான் கச்சேரி களை கட்டியது என்று சொல்ல வேண்டும். நன்றாக உழைத்துப் பாடினர். வயலின் வாசித்தவரும் சிரமமின்றி அழகாக வாசித்தார். இதே இராகத்திற் தானம் பாடினர். தொடர்ந்து **தோடி, கல்யாணி, தர்பார்** இராகங்களைச் சிறப்பாகப் பாடினர். நாலு இராகங்களில் தானம் மட்டும் பாடிப் பல்லவியும் பாடி ஸ்லா

மும் இப்படியே பாட நினைக்கும் பாடகர் குறித்த இராகங்களை ஆலாபனையும் செய்திருக்க வேண்டும் என்பதே எனது கருத்து. **சங்கராபரணனை அழைத்தோடிவாடி கல்யாணி தர்பாருக்கு** என்ற இராகமாலைப் பல்லவியைப் பாடினர். (சதுஸ்ர சாதித்திரிபுடை இரண்டு களைச் சவுக்கம்—முக்கால் இட எடுப்பு) ஸ்வரம் பாடும்போது சங்காபரணனை என்ற இடத்திற்கு மட்டும் ஒவ்வொரு இராகத்திலும் பாடப்பெற்றது. பல்லவியில் **சங்கராபரணனை** என்ற சொல்லும் சங்கராபரண இராகமும் எந்த இடத்தில் எடுத்துப் பாடப்படுகிறதோ, அதே இடத்திற்கு ஸ்வரம் பாடி வந்து எடுக்குமாப்போல் மற்றைய இராகங்களிற் பாடப்படும் சொற்களையும் முறையே அந்தந்த இராகங்களிற் பாடி வந்து அந்தந்த இடங்களில் எடுப்பது உசிதமாகும். இப்படியாகப் பாடிஇருந்தால் இன்னும் விசேஷமா யிருந்திருக்கும் இந்த இராகமாலிகைப் பல்லவி என்பது எனது கருத்து.

பல்லவியின் பின்பு பாரதியார் பாடலொன்றும், **கேதார கௌளம், கானடா, நீலாம்புரி, மோஹனம்** முதலிய நான்கு இராகங்களில் அமைத்து பின்னைத் தமிழும் பாடியபின்னர் சிதம்பர வித்தியாசாலை அதிபர் ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் பேசும்போது வித்தியாலயத்தின் வளர்ச்சிக்காக உழைக்க முன்வந்துள்ள சகல அன்பர்களையும், அவ்வூர் மக்களையும் மிகவும் பாராட்டினர்.

வித்தியாலயத்து வளர்ச்சி நிதிக்காகச் சங்கீதக் கச்சேரி மூலம் பணந்திரட்டிக் கொடுப்பதற்கு முன்வந்த ஸ்ரீ சடகோபன் கோஷ்டியினரின் தாராள மனப்பான்மையை அவர் மெச்சினர்.

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

# இசைக்கலைஞனோடு

## ஒரு பகல்

— சானா

### சிங்களத் தீவு

**பாரதியாரின்** "சிங்களத் தீவினிற்கோர் பாலமமைப்போம்" என்றதைப்பற்றிய ஒரு சிறிய விவாதம் ஏற்பட்டது. "சிங்களத்தீவென்பது பிழை. அது பாரதியாரின் தவறு" என்று ஒருவர் சொன்னர். "நீர்சொல்வதுவும் தவறு. இலங்கைத் தீவிற்குப் பொருந்திய பெயர் சிங்களத்தீவொழிய வேறொன்றும் இல்லை. பழைய சரித்திரங்கள் மூலமாகவே சிங்களத் தீவு என்று தான் இலங்கையை அழைத்து வந்தனர். இதுவே பொருத்தமானது" என்றார் சடகோபன்.

"சிங்களவர் தான் முதன் முதலாக இலங்கையில் வசித்து வந்தார்கள் என்பதெல்லாம் கட்டுக்கதை. தமிழர்களே முதன் முதல் வசித்துள்ளார்கள். சிங்களரிலும் பார்க்கத் தமிழர்களுக்கே முற்றும் சொந்தமானது நமது இலங்கைத் தீவு. ஆகையால் கட்டுக்கதைகளை நாம் நம்பக்கூடாது." என்றார் தமிழரை ஆதரிப்பவர்.

"எப்படியாவது இருக்கட்டும், இலங்கைத்தீவில் இப்பொழுது சிங்கள ஆதிக்கம் தானே பெருகிவருகிறது. ஆகையால் இப்பொழுதாவது இத்தீவைச் சிங்களதீவென்றழைப்பதில் ஒரு பிழையுமில்லையே" என்று சடகோபன் சொல்வதற்கு முன் நாங்கள் போய்க்கொண்டிருந்த 'கார்' இராமநாதன் கல்லூரிக்குள் நுழைந்தது.

### இராமநாதன் கல்லூரி

காரைவிட்டிறங்கியதும், ஸ்ரீமதி பிள்ளையும், ஸ்ரீ கணபதி ஐயரும் எங்களை வரவேற்று லேடி இராமநாதனின் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார்கள். ஸ்ரீமதி நடேசனும் வழியிற் சேர்ந்து கொண்டார். ஆசனத்திருந்து பேசிக்கொண்டிருக்கும் சமயம் பூசையை முடித்துக்கொண்டு திரு. நடேசன் அவர்கள் வந்து சம்பாஷணையிற் கலந்து கொண்டார். கல்லூரி மாணவிகளுக்கு ஏதாவது சொல்லும்படி ஸ்ரீ சடகோபனைக் கேட்டபொழுது, அவர் பேசுவதிலும் பார்க்கப் பாடுவது தான தனது வேலை என்று சொல்லிப்பாடச் சம்மதித்தார்.

### மாணவிகள் கூட்டம்

1000த்திற்கு மேற்பட்ட மாணவிகள் அமைதியாக அமர்ந்திருந்தார்கள். திரு. நடேசன் அவாகள் மாணவிகளுக்குச் சடகோபனை அறிமுகப்படுத்தி வைத்துச் சடகோபனைப் பாடும்படி கேட்டார். ஆனந்த பைரவி இராக ஆலாபனைபண்ணித் **தோடுடைய செவியன்** என்ற தேவாரத்தைப் பாடினர். பின்பு **காலைத் தூக்கி நின்றாடும்** என்ற உருப்படியை யதுகுல காம்போதியிற் பாடிச் சுருட்டி ஆலாபனையின் பின் **காணக்கண் கோடி வேண்டும்** என்ற உருப்படியைப் பாடினர். இதன் பின்னர், இராமநாதன் கல்லூரி மாணவிகள் இருவராற் செல்வி சுபத்திரா தேவியின் மேற்பார்வையில் இரு கீதங்கள் பாடப்பட்டன. மிகவும் நன்றாயிருந்ததென்றே சடகோபன் சொன்னாரென்றால் இராமநாதன் கல்லூரி இசைவளர்ச்சிக்காக எவ்வளவு தொண்டாற்றி வருகின்றது என்று சொல்லவும் வேண்டுமா.

### நடராஜன்

மேல்மாடியிலுள்ள கோயிலைப் போய்ப்பார்த்தோம். நடராஜனின் உருவம் எழுந்தருளியிருக்கும் மண்டபம் சடகோபனை யெய்மறக்கச் செய்துவிட்டது. **காலைத்தூக்கி நின்றாடும் தெய்வம்** என்ற உருப்படியைப் பாடிவிட்டுக் காலைத் தூக்கி நின்றாடும் தெய்வத்தைப் பார்க்கக் கொடுத்து வைத்தது தான்செய்த பாக்கியமே என்று சொன்னர்.

### இராமநாதேஸ்வரன் கோயில்

சேர் இராமநாதனைச் சமாதியமைத்து அதற்குமேற் கட்டிய கோயிலுக்கே இராமநாதேஸ்வரன் கோயிலென்று சொல்வார்கள். அக்கோயிலுக்குத் தேவையான கருங் கற்களை வன்னியிலிருந்தே எடுப்பித்தோம் என்று ஸ்ரீமதி நடேசன் சொன்னர்.

### கல்லூரி பார்த்தல்

பின்பு ஒவ்வொரு வகுப்பையும் சென்று பார்வையிட்டோம். முக்கியமாகச் சடகோபனின் மனதைக் கவர்ந்தது பின்னல்வேலை வகுப்புத்தான். ஐக்கியசங்கம் நடாத்தும் கல்லூரி விற்பனையிடத்திற்கு எங்களை அழைத்துச் சென்று மிட்டாயும் 'சோக்க' ளேற்றும் தந்துதவினர்கள்.

### பின்ளை வீடு

கல்லூரி முழுவதையும் பார்வையிடுவதற்கு 3 மணி நேரமாகிற்று. இந்தியாவிற்கூட இவ்வளவு சிறந்த பெண்கள் கல்லூரியைப் பார்த்ததில்லையென்று சடகோபன் கூறினர். லேடி இராமநாதன், திரு. நடேசன், ஸ்ரீமதி நடேசன் முதலியவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு ஸ்ரீ பிள்ளை வீட்டிற்குச் சென்றோம். அவர்கள் சடகோபனுக்குக் காட்டிய மரியாதையும் அன்பும் மிகவும்போற்றப்படத்தக்கது.

### உரும்பராய் வெளியில்

சாவகச்சேரிக்குப் புறப்பட்டோம். இசையைப்பற்றிச் சடகோபன் பேசும்போது இராமநாதன் கல்லூரி காட்டிவரும் ஆர்வம் மெச்சத்தக்கது என்றார். உரும்பராய் வெளியில் இசையைப்பற்றி இன்னும் சொன்னர்.

### குளோப் ஜான்

எனக்கு குளோப் ஜான் பிடிக்கவே பிடிக்காது. கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிட்டு இப்போது குளோப் ஜானிலேயே சீவிக்கலாம்போலிருக்கிறது. அதுபோலவே சங்கீதத்தையும் சிறிது சிறிதாகவே நாம் கற்கவேண்டும் என்று சொன்னர்.

### சாவகச்சேரி

அன்பர் இராஜ அரியரத்தினம் இன்னும் சடகோபனைக் காணவில்லையேயென்று வீட்டிற்கும் வீதிக்குமாக நடந்துகொண்டிருந்தாரென்று சொன்னர். நாம் போய் அவர் வீட்டில் இறங்கியதும் அமோகமான வரவேற்பு. இதில் நண்பர்கள் பலர் கலந்து கொண்டனர். நண்பர்களுடன் சடகோபன் மத்தியான போஜனம் முடித்துக்கொண்டு சிறிதுநேரம் இளைப்பாறிய பினனர் வல்வெட்டித்துறை சென்றோம். வழியில் சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கும் ஸ்ரீ சடகோபன் விஜயம் செய்தார்.

சென்ற செவ்வாய்க்கிழமை சடகோபன் விமான மார்க்கமாய் இந்தியா திரும்பினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 25

உண்மையாகவே இந்த இரு வருடங்களும் எனக்குச் சிந்தனையையும் வேதனையையும் அளிக்கத்தான் செய்தன. ஆயினும் இனி நான் கூறுஞ் சம்பவங்கள் என் வாழ்க்கையிலே அழிக்க முடியாத கரிக் கோடுகளைக் கீறிவிட்டன. என்னுடைய நிமிர்ந்த நடையில் ஒரு குனிவை உண்டாக்கிவிட்டன.

இன்றுகூட இதைநினைத்தால் எனக்குத் துக்கம் துக்கமாய் வருகிறது. "வானுயர் தோற்றம் இருந்தென்ன தன்னெஞ்சந், தானறி குற்றப்படின்" என்று வள்ளுவன் சொன்னானே? எவ்வளவு உண்மையான வாக்கியங்கள் அவை!

நான் பெரிய மனிதன் என்று காட்டிக் கொள்வது என்னவோ சாத்தியமானதுதான்! ஆனால் என் மனச்சாட்சியை என்னால் ஏமாற்ற முடியுமோ?

* * *

அன்று கலாசாலை மாணவமாணவிகளெல்லோரும் சினிமாப்பார்ப்பதற்குச் சென்றிருந்தோம். நாங்கள் முன் வரிசையிலும் பெண் மாணவிகள் பின்வரிசையிலுமாக இருந்தோம்.

என்னால் என்னை அடக்கிக் கொண்டிருக்க முடியவில்லை. என் கண்கள் புவனா இருக்குமிடத்தில் வட்டமிட்டுக்கொண்டிருந்தன. அந்த மோகனக் கருவிழிகள் எப்போது என்னை ஆசையுடன் நோக்குமென்று தவங் கிடந்தேன் என்றே சொல்லவேண்டும்!

என்ன? நான் கனவு காண்கிறேனா? ஓ கடவுளே! இது கனவாக இருந்தாலும் பாதகமில்லை! இதைமட்டும் சிறிது நீடிக்கச் செய்துவிட்டாயானால்?

புவனாவும் என்னைப் பார்த்தாள்! கனிவுடன் பார்த்தாள்!! காதலுடன் நோக்கினாள்!!! வாணகைபரப்பி என் இருதயத்தை வாள் கொண்டு அறுத்தாள்!!!

எனக்கு உற்சாகம் என்றலைகிரி ஒவ்வொரு நரம்பிலும் பாய்ந்து ஓடியது. 'மதுவுண்ட வண்டு, கள் குடித்த குடிகாரன்' என்றுதான் என்னை அச்சமயத்தில் உவமித்திருக்க வேண்டும்.

இந்தப் பார்வைக்காக நான் எத்தனைநாள் காத்திருந்தேன்! 'புவனா உன்னுடைய இருதயத்திலும் காதல் ஊற்றுப் பிரவாகித்து ஓடத் தொடங்கிவிட்டதா? உன் அந்தரங்கம் காதல் உணர்ச்சியால் துடிப்புற்றிருக்கிறதா? அப்படியானால் வா! என் இருதயத்தால் உனக்கான ஓர் காதல் நந்தவனத்தைச் சமைக்கிறேன்! அதில் துள்ளிக் குதி! பூப்பந்தாடு! என் ஆதுரம் நிறைந்த கண்கள் உன் கொடிபோன்ற உருவைப் பார்த்துப் பார்த்துப் பரவசமடையட்டும்! உன் தேன்போன்ற மொழிகள் என் காதுகளிற் பாய்ந்து இனிக்கட்டும்! புவனா! புவனா!!' என்று என் உள்ளமானது மோகப் பித்தேறிப் பிதற்றியது. அது என் கண்கள் மூலமாகப் புவனாவுக்குத் தெரிந்துவிட்டதுபோலும்.

அவள் பார்த்தாள்! மீண்டும் மீண்டும் மீண்டும் பார்த்தாள்! அந்தக் கண்களின் காந்த சக்தி, அந்த மலர் முகத்தில் ஒளிவிட்ட புன்னகை, இப்போதுகூட என் நினைவுக்குவருகின்றன! சிறிது ஆனந்தமாகக்கூட இருக்கிறது!

# மலர்ப் பலி

—சொக்கன்—

ஆனால்!

அன்று புவனா என் இருதயம் என்ற அரியாசனத்தில் வீற்றிருந்தாள்! இன்றோ! அவள் என் சகோதரி! என் இருதயத்தில் அந்தரங்கமாகிய எத்தனை அறைகள் உண்டோ அவள் அவற்றையுந் திறந்து பார்த்தாற்கூட புவனா! என் சகோதரி என்பதைவிட வேறொன்றையுங் காண முடியாது. இது உண்மை!

## 26

நான் துணிந்துவிட்டேன்! என் இருதயத்திலிருந்த ஆசை முழுவதையும் கொட்டி ஓர் காதற் கடிதம் எழுதினேன் புவனாவுக்கு! ஏதோ விதமாக ஒரு புத்தகத்துள் வைத்து அதை அவளிடம் சேர்த்தும் விட்டேன்.

"இன்று பின்னேரம் புவனா! புத்தகத்தைத் திறந்து பார்ப்பாள்; என் காதல் கடிதத்தைக் காண்பாள்! அவள் மனநிலை எப்படியிருக்கும்?

ஒன்று! அவள் உற்சாகம் கொள்ளுவாள்! காதலாற் பக்குவமடைந்துள்ள (நேற்றிலிருந்து) அவள் உள்ளம் களிகொண்டு துள்ளும்! கடிதத்தைக் கண்களில் ஒற்றிக் கொள்வாள்! ஒன்றுக்கு நூறு தடவை வாசிப்பாள்! அதை முத்திப்பாள்! இன்னும்...!

மற்றது என் அத்துமீறிய செய்கையைக் கண்டு கோபத்தால் துடிதுடிக்கும் அவள் இருதயம்! கண்கள் சிவக்கும்! "அத்துமீறிப் போகிறான் இவன்" என்று சீறுவாள்! ஒருவேளை அதிபரிடம் முறையிட்டுவிட்டால்....?

"சீ! சீ! அப்படி ஒன்றும் நடவாது. பழைய புவனாவென்றால் அப்படிச் செய்துதான் விடுவாள்! நேற்றையப் புவனாவோ? நிச்சயமாகச் செய்ய மாட்டாள்! உறுதி!

ஒருவேளை செய்துவிட்டால்? செய்யமாட்டாள்! செய்துவிட்டால்? செய்யமாட்டாள்!

என் மனமே ஆட்சேபனையைக் கிளப்பிச் சமாதானத்தையும் சொல்லியது. ஆனால் சமாதானத்திலும்பார்க்க ஆட்சேபமே என் மனதை அதிகமாக ஆதிக்கம் கொண்டிருந்தது என்பதை மறுப்பதற்கில்லை.

அன்று இரவைக் கழிக்க முடியாது திண்டாடினேன்! ஒரு சமையம் 'ஏன்? இந்தக் கடிதத்தை எழுதினேன்?' என்று எண்ணம் உண்டாகும். "பின் புவனாவுக்கு எப்படி என் காதலை வெளிப்படுத்துவது? ஆசை என்ற பாரத்தை என் இருதயத்தால் எத்தனை நாளைக்குத்தான் தாங்கமுடியும்?" என்ற வினாக்கள் அவ்வெண்ணத்தை மண் கவ்வ வைத்துவிடும்.

"கண்மூடா இரவு, பொறுமையால் தலைகவிழ்ந்து நட்சத்திரங்கள் மூலம் நுண்ணிதாய் கவனித்து நிற்கிறது" என்று கீதாஞ்சலியில் சொல்லப்படுகிறது. இரவு பொறுமையால் தலை கவிழ்ந்திருக்கிறது; அது கண் மூடவில்லை. நானோ பொறுமை யிழந்து துடிதுடிப்புடன் கண் மூடாதிருக்கிறேன்!

எதிலும் பொறுமையோடிருக்கலாம் சிறிதளவாவது; ஆனால் காதலின்எதிர்ப்பார்ப்பில் பொறுமையோடிருப்பது சாத்தியமானதேயல்ல!

சாளரத்தின் வழியாக நோக்கினேன். புவனாவின் அறையிலே—அவள் உதவிப் பத்திரிகாசிரியையாயிருந்து விலகிய நாளிலிருந்து வெகு நாட்களின் பின் விளக்கு மினுமினுத்துக் கொண்டிருந்தது. ஏன்? ஒருவேளை அவள் என் கடிதத்திற்குப் பதில் எழுதிக்கொண்டிருக்கிறாளோ? ஆனால் மேசையடியில் அவள் காணப்படவில்லையே?

இந்த ஆவலுக்கு முடிவேயில்லையோ? கடிகாரத்தில் மணி பன்னிரண்டடித்தது. இன்னும் ஆறு ஏழு மணித்தியாலங்களைக் கழிக்கவேண்டும். எப்படிக் கழிப்பது! படிக்கலாம் என்று ஒரு புத்தகத்தை அலுமாரியிலிருந்து எடுத்தேன். புத்தகத்தின் பெயர் "கிருஷ்ணகாந்தன் உயில்" என்பது; முன்பு பல தடவை வாசித்திருக்கிறேன்.

அந்தச் சமயத்தில் அப் புத்தகத்தை வாசிப்பதை விட அதைப்பற்றி நினைப்பதே மேலென்று தோன்றியது. "கோவிந்தலாலால் கைவிடப்பட்டு உடல் நலிந்து பாயோடு பாயாய் ஒட்டிக்கொண்டு வேதனையாற் குமுறும் அந்தப் பிரமரையின் நினைவுதான் முதலில் வந்தது; அவள் தன் கணவன் என்ற உரிமை இருந்துங்கூட கோவிந்தலாலிடம் ஒரு இன்பமும் பெறமுடியவில்லை. நானோ சகபாடி என்ற ஒரு உரிமையன்றி வேறு ஒருவிதமான உரிமையுமற்றவன் புவனாவில்! அவள் அலட்சியம் செய்வதும், அன்பு செய்வதும் அவள் கையில் தானே உண்டு.

எனக்கு ஏன் இந்தப் பிரமரையின் நினைவு ஏற்படவேண்டும்? இது ஓர் அபசகுனமோ?

புத்தகத்தை மேசையில் எறிந்துவிட்டுப் படுக்கையிற் போய்த் தொப்பென்று விழுந்தேன். கண்களை மூடிக்கொண்டேன். கொல்லவரும் வேடுவனைக் கண்டு தன்தலையை மறைத்துக் கொண்டு தான் பாதுகாப்பில் இருப்பதாக நினைத்துக் கொள்ளுந் தீக்கோழிபோல ஒரு பெலவீனமான உறுதியைக் கைப்பிடித்துக் கொண்டு அதன் அத்திவாரத்திலே பல கனவுக் கோட்டைகளைக் கட்டிக்கொண்டிருந்தேன்.

## 27

என் கனவுக் கோட்டைகளெல்லாம் தகர்ந்து விழுந்துவிட்டன! நான் எதை உறுதியாய் நம்பினேனோ அது உறுதியற்றுப்போய், நான் உறுதியற்றது என்று நினைத்து அலட்சியமாயிருந்தது உறுதியானதாய் என்னைக் குற்றவாளியாக்கி அதிபர் முன்னிலையில் தலைகுனிந்து நிற்க வைத்துவிட்டது.

புவனா நான் கடிதமெழுதினதை அதிபரிடம் 'றிப்போட்'பண்ணிவிட்டாள். நான் எதிர்பாராதது நடந்துவிட்டது. இந்த அவமானத்தை நான் எப்படிச் சகிப்பது?

அதிபர் நேற்றைய வரையில் என்னில் மிக உயர்வான அபிப்பிராயந்தான் கொண்டிருந்தார். அவர் முன்பு இதற்குமுன் குற்றவாளி என்ற பெயருடன் நான் நின்றதேயில்லை. கடந்த வருடத்து முடிவில் அவர் முகமலர்ச்சி

**தொடர் கதை**

யுடன் என் வகுப்பு வியாசப் போட்டியில் முதலாவது பரிசை எனக்கு அளித்தார்! அன்று அவர் "நாகராஜன்! நீ பிற்காலத்தில் மிக உயர்ந்த ஸ்தானம் ஒன்றை அடைவாய்" என்று என் முதுகில் தட்டிச் சொன்னதை இன்னும் நான் மறந்துவிடவில்லை.

ஆனால் இன்று நான் அவர் முன்பு குற்றவாளியென்னும் தகுதியை அடைந்து நிற்கிறேன். எனக்குப் பரிசை உவந்தளித்த அதே கரம் தாராதாரப்பத்திரத்தை வெறுப்புடன் அளித்து விடுமோ! இதை நினைத்தபொழுது என் உடல் நடுங்கியது; ஐயோ! இது எவ்வளவு துர்ப்பாக்கியமான பயங்கர நிலைமை!

நான் மௌனியாய் நின்றேன்! எதைப் பேசுவது? என்னதான் பேச இருக்கிறது!

அவர் அக் கடிதத்தைக் காட்டி இதற்கு நான் என்ன சொல்லப்போகிறேன் என்று கேட்டார்.

நான் மறுதலிக்கவில்லை. குற்றவாளி உண்மையை ஒப்புக்கொள்வது பல சமயங்களில் அவனுக்கு நன்மையையே அளிக்கிறது? இல்லாமல் துன்பத்தை அளித்தாலும் தள்ள இயலுமா? பொய் சொல்லி அவப் பெயர் கேட்பதிலும் உண்மை சொல்லுவதிற் பிழையில்லை என்றெல்லாம் அந்த ஒருகணத்தில் யோசித்துப் பின்வருமாறு பதில் சொன்னேன். "நான் எதையும் மறைக்க விரும்பவில்லை; நான் கடிதம் எழுதியது உண்மைதான்."

தாம் என்னை எவ்வளவோ நல்லவனென்று நம்பியிருந்ததாகவும், நான் இப்படிச் செய்வேனென்று தாம் எதிர்பார்த்

(தொடர்ச்சி 12-ம் பக்கம்பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The
# EELAKESARI
NATIONALIST TAMIL WEEKLY
LARGEST CIRCULATION IN CEYLON, INDIA & MALAYAN UNION

Vol. 19 | Chunnakam, Sunday, Mar. 13, 1949 | No. 32

## சடகோபன் கானவெள்ளம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

புதியகட்டடங்கள் அமைக்கும் பணியிலே தமக்கு உதவி புரிந்து, சிதம்பர வித்தியாலயத்தை உன்னத நிலைக்குக் கொண்டு வருவதற் கெனச் சலியாது உழைத்துவரும் அத்தனை பேரின் சேவைகளையும் குறிப்பிட்டிருந்தார்.

உதவிக் கல்வி மந்திரி ஸ்ரீ கே. கனகரத்தினம் அவர்கள் ஸ்ரீ சடகோபனின் இசைச் செல்வத்தைப்பற்றி மனப் பூர்வமாக மெச்சினர்.

சிங்களமக்கள் கலைவளர்ச்சியில் ஆர்வங்கொண்டிருப்பதுடன் அவர்கள் அத்துறையில் ஊக்கமாக உழைத்து வருகின்றனர் என்பதை உணர்ச்சி ததும்பப் பேசிய ஸ்ரீ கனகரத்தினம் அவர்கள் அதே போன்று தமிழர்களுங் கலை வளர்ச்சியில் ஈடுபடவேண்டு மெனக் குறிப்பிட்டார்.

சிதம்பர வித்தியாலயத்தின் வளர்ச்சியைத் தாம் கவனித்து வருவதாகவும அதற்காகத் தபமாலான உதவியைச் செய்து வைப்பதாகவும் அவர் சபைக்குத் தெரிவித்தார்.

பருத்தித்துறைப் பிரதிநிதி ஸ்ரீ ரீ. இராமலிங்கம் தமது பேச்சிலே, ஸ்ரீ சடகோபனினதும், அவர் தம் கோஷ்டியினரதும் திறமையை வியந்திருந்தார். சிதம்பர வித்தியாலயத்து அதிபருக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும் அவ்வூர் மக்கள் போதிய உதவி செய்து அவர்களை ஊக்கப் படுத்த வேண்டு மென்பதை அவர் தமது பேச்சில் வற்புறுத்தியிருந்தார்.

வடபகுதி வித்தியாதிகாரி ஸ்ரீ எஸ். யூ. சோமசேகரம் கல்வி சம்பந்தமான சில உண்மைகளை மக்களின் உள்ளங்களிற் பசுமரத்தாணி போற் பதியச் செய்தார். பள்ளிக்கூடத்திற் பாடங்களைப் படித்துவிட்டுப் பின்னர் வீட்டிலே பிரத்தியேகமாக உபாத்தியாயரை அமர்த்தி அவரிடமும் பாடங்களில் உதவி பெறும் முறையை அவர் நன்றாகக் கண்டித்தார்.

சிதம்பர வித்தியாசாலை மாணவர்கள் சிறந்த முறையிற் கல்வி பயில வேண்டுமாயின் அப் பள்ளிக்கூடத்திலே சகல வசதிகளும் அமைந்திருக்கவேண்டு மெனவும் அவா தெரிவித்தது மன்றி வித்தியாலத்து **வளர்ச்சி நிதிக்குத்** தாராளமாகப் பணம் உதவும்படியும் சபையோரை வேண்டிக்கொண்டார்.

சொறபொழிவுகளுக்குப் பின் மருவே செறித்த என்ற திருப்புகழைச் சடகோபன் பாடிக் கச்சேரியை முடித்தார்.

பொதுவாக இந்தக் கச்சேரியில் நன்ருய்ப் பாடினர் என்றே சொல்ல வேண்டும. வயலின் வித்வானுக்கு அதிக சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லையாயினும் சிறிது சிறிது நேரத்திற்குள் தனது அபார ஞானத்தைக் காட்டிவிட்டார் சேதுராமையா. பாட்டுக்கு அனுசரணையாகச் சேர்ந்து வாசித்தது மிகவும்நன்ருயிருந்தது இம்மாதிரி வாசிப்பதாற் பாடகருக்கு மிகவும் உதவியாகவிருந்தது.

எது எப்படி யிருந்தபோதிலும், இந்தக் கச்சேரியில் மிருதங்கம் வாசித்த மதுரைக் கிருஷ்ணனுக்கும் போதிய சந்தர்ப்பம் இலலாதிருந்தபோதிலும் பாடும்போது சோபிக்கத்தக்க முறையில் மிருதங்கம் வாசித்துத் தமது திறமையைக் காட்டினர்.

கடம் வாசித்த வயித்தியநாதன் தாம் மற்றவர்களுக்கு இடைஞ்சல் செய்யக் கூடாதென்று நினைத்து, பாடும் போது மிக அமைதியாகவும, தனியாவர்த்தனத்தில் ஓரளவு நன்ருகவும் வாசித்தார்.

### யாழ்ப்பாணம் இன்னிசை

ஞாயிற்றுக்கிழமை மாலை உதவி மந்திரி திரு. கே. கனகரத்தினம் அவர்கள் ஆதரவில் யாழ்ப்பாணம் தமிழாராய்ச்சிக் கழகநிதிக்காகச் சடகோபன் அவர்களின் உதவிநிதி இசைக்கச்சேரிநடைபெற்றது.

விமர்சனத்தை முற்றும் இங்கு தருவது அவ்வளவு உசிதமல்ல. ஏனெனில் வல்வெட்டித்துறை சிதம்பர வித்யாலய நிகழ்ச்சியின் விமர்சனத்தைத்தானே]இப்பொழுது வாசித்தீர்கள்.

நகரசபைமண்டபம் நிறைய ஜனங்கள் சூழ்ந்திருந்தனர். கச்சேரி வெகு சிறப்பாகநடைபெற்ற தென்ருலும், ஒலிபெருக்கி இடையிடையே கொடுத்துவந்த சில இடைஞ்சல்களைக் கானரத்தினம் பொறுத்திருப்பாரெனறே எண்ணுகிறேன்.

அன்று ஸ்ரீ சடகோபனின் இன்னிசைக் கச்சேரியைப் பாராட்டிப் பேசிய ஸ்ரீ சு. நடேசபிள்ளை (அதிபர்) பரமேஸ்வரக்கல்லூரி) அவர்களின் இரத்தினச்சுருக்கமான பேச்சு இலக்கியச் சுவையுடன் ததும்பியது. சடகோபன அவர்களின் இசையிற் குளர்ச்சியும், சுகமும் இருக்கின்றன வென்பதைக் குறிப்பிட்ட ஸ்ரீ நடேசபிள்ளை அவர்கள் ஸ்ரீ சடகோபனுக்கு சங்கீத இளவரசர் என்ற பட்டத்தையுஞ் சூட்டினர். இசைவிருந்தை அனுபவித்துக் கொண்டிருந்த இரசிகர்களுக்கு ஸ்ரீ நடேசபிள்ளையின பேச்சு மேலும் சுவையை ஊட்டிற்றெனக் கூறினல் அது மிகையாகாது.

—சாணு.

## மலர்ப்பலி

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கவில்லையென்றும், என்னையென்றபடியால்தான் 'டிஸ்மிஸ்' பண்ணுவதற்குத் தாம் யோசிப்பதாகவும், இன்னெருமாணவனென்ருல் தாம் 'டிஸ்மிஸ்' பண்ணத தயங்கமாட்டாரெனறும சொல்லி அதிபர் சிறிதுநேரம மௌனமாயிருந்தார்; சிந்தித்தார்.

எனக்குச் சிறிது நம்பிக்கை யுண்டாயிற்று. நான் முற்றுக் கைவிடப்படவில்லையென பதை அப்போதுதான் உணர்ந்தேன். நடுங்கிய குரலில் "என எதிர்கால வாழ்வு உங்களிற்ருன் தங்கியிருக்கிறது. அதற்குமேல் நான் என்ன சொல்லப்போகிறேன்" என்றேன். — தொடரும்

### சிவானந்த சங்கம் திருகோணமலை

சிவானந்த சங்கத்தின் ஐந்தாவது ஆண்டுவிழாக் கூட்டம் 6-3-49 ஞாயிற்றுக்கிழமை சிவானந்த சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

காலை 9 மணிக்கு அங்கத்தவர்களின் பிள்ளைகட்கு சங்கீதப் போட்டியும் பேச்சுப்போட்டி தமிழிலும் ஆங்கிலத்திலும் நடைபெற்றன. சங்கத் தலைவர் ஸ்ரீ த. ஏகாம்பரம் ஜே. பி. வெற்றி பெற்றவர்கட்கு பரிசு வழங்கினர்.

மாலை $5\frac{1}{2}$ மணிக்கு ஆண்டு விழா, தலைவர் த. ஏகாமபரம் அவர்களின் தலைமையில் ஆரம்பமாயிற்று. ஸ்ரீ வீ. பூபாலபிள்ளை தமது வருடாந்த அறிக்கையில் இவ்விதமான ஸ்தாபனங்கள் வளர்ச்சியுறுவதற்குப் பொருளாதாரம் அத்தியாவசியமானதெனக் கூறினர். காரியதரிசியினுடைய அறிக்கையும் தனதிகாரியினுடைய அறிக்கையும் சபையின் ஏகமனதான அங்கீகாரம் பெற்றன. புதவருடத்திற்கு கீழே காணும் உத்தியோகத்தர்கள் ஏகமனதாய்த் தெரிவுசெய்யப்பட்டார்கள். **போஷகர்** சுவாமி நடராஜானந்தஜீ, **உபபோஷகர்கள்:-** திருவாளர்கள் வெ. மாயவன், வே. நாகப்பா, K. S. மாணிக்கம். செ. சித்திரவேல், எஸ். பொன்னுத்துரை, க. இராமலிங்கம், அ. சோமசுந்தரம், பெ. வ. செல்லையா, சு. ச. செல்லையா, ச. மார்க்கண்டு, க. விநாயகமூர்த்தி, வே. பாலவிநாயகம், மு. கோணமலை. **தலைவர்** ஸ்ரீ. த. ஏகாம்பரம் ஜே. பி; **உபதலைவர்கள்:-** திருவாளர்கள் செ. மகாலிங்கம், பெ. சிவசுந்தரம்; காரியதரிசி ஸ்ரீ. வீ. பூபாலபிள்ளை; **தனதிகாரி** கோ. நாராயணசாமி; **உப காரியதரிசி** ஸ்ரீ. க. செல்லராசா; **உப தனதிகாரி** வே. மார்க்கண்டு; **பொருள் சேமிப்பாளர்கள்** திருவாளர்கள் க. இராசா. பா. பொன்னையா; **கணக்குப் பரிசோதகர்கள்:** திருவாளர்கள் கோ. முத்துக்குமாரு, வ. வடிவேல்; **நிர்வாக சபை அங்கத்தவர்கள்** திருவாளர்கள் மு. கோ. சங்கரதாஸ், க. சின்னத்தம்பி, க. குமாரசாமி, வெ. ஆறுமுகம், வே. துரையப்பா, வீ. பரஞ்சோதிப்பிள்ளை, வே. பாலசுந்தரம், செ. செல்லமாணிக்கம், வீ. கணபதிப்பிள்ளை, கு. கார்த்திகேசு ஆகியோர்கள். திருவாளர்கள் கோ. இராஜகோபால், க. செல்வராசா ஆகியோர்கள் குறிப்புரை கூறினார்கள்.

—கடிதம்

### நவாலி - இராப்பாடசாலை

நவாலி சமூகசேவாசங்கத்தின் ஆதரவில், ஓர் இராப்பாடசாலை 2-3-49 புதன்கிழமை மாலை 7 மணியளவில் திரு. டீ. பீ. இளையதம்பிப் போதகர் அவர்களால் அமரிக்கன் மிஷன் பாடசாலையில் திறக்கப்பட்டது.

### பதில்

1. ஆந்தை.
2. ஜேப்ஸ் வாற்.
3. சயங்கொண்டார்.
4. பங்குனி, சித்திரை, வைகாசி.
5. நெருப்பு.
6. மாவிட்டபுரம், தெல்லிப்பழை, மாதகல், இளவாலை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு திருமகள் நிலையம் நா. பொன்னையா அவர்களால் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் 1949-ம் ஆ மார்ச் மீ 13உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.